Supplimentary for New Cine Today Special Tamil Novel Rs. 8/- 2009 R.Dis. No.1980/2005

## இனிமையான குடும்ப நாவல்கள்


# அகிலா கோவிந்த்தின் பிற நாவல்கள்

| | |
|---|---|
| ➢ காதல் தேன் நிலா | 120.00 |
| ➢ தோகை இளம்மயில் | 65.00 |
| ➢ என் இனிய கண்ணாளா! | 80.00 |
| ➢ மன்னவனே வரலாமா! | 70.00 |
| ➢ அன்புள்ள மான் விழியே | 100.00 |
| ➢ எங்கே என் தேவதை | 100.00 |
| ➢ ரதி என்னும் அழகுக்கு | 65.00 |
| ➢ அழகு மயிலாள் | 70.00 |
| ➢ கண்மணி நிமிர்ந்து நில்லடி | 65.00 |
| ➢ வருகிறேன் ராஜகுமாரி | 65.00 |
| ➢ காத்திருப்பேன் ராஜகுமாரா | 70.00 |
| ➢ வண்ண மயில் பெண்ணொருத்தி | 85.00 |
| ➢ வா... பொன் மயிலே | 70.00 |
| ➢ பால் வண்ணம் பருவம் கண்டு | 75.00 |
| ➢ காக்கைச் சிறகினிலே | 80.00 |
| ➢ விழியோரப் பார்வையிலே | 70.00 |
| ➢ மைவிழி மானே | 90.00 |
| **லதா சேகர்** | |
| ➢ என்றாவது ஒருநாள் | 80.00 |
| ➢ புன்னகைப் பூக்கள் | 70.00 |
| ➢ எங்கேயும் எப்போதும் என்னில்! | 120.00 |
| **மேகலா சித்ரவேல்** | |
| ➢ ஆனந்த ஆராதனை | 45.00 |
| ➢ கோடை மழை | 50.00 |
| ➢ முத்தழகி | 90.00 |

வெளியீடு: **பிரியா நிலையம்,** சென்னை - 14. தொடர்புக்கு: **94444 62284**
வியாபாரிகளுக்குத் தக்க கழிவு தரப்படும். VPP யும் உண்டு.
நூல் கிடைக்குமிடம் - M.O. அனுப்ப வேண்டிய முகவரி
**இலக்குமி நிலையம்**
53, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14. போன்: 28133658

குறிப்பு: புதிய பெண் எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். தேர்வு செய்யும் நூல்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.

பிரபல புத்தகக் கடைகள் அனைத்திலும் மேற்கண்ட நூல்கள் கிடைக்கும்.



# அன்பைத் தேடி...

பால் நிலா மெல்ல
வானில் தவழ்ந்து
கொண்டிருந்த இரவு
நேரம்.

மொட்டை மாடியின்
விஸ்தாரமான
பரப்பளவில் அந்த
பெரிய திண்டில்
கைகளை வைத்தபடி
அண்ணாந்து
ஆகாசத்தை வியந்து
பார்த்து ரஸித்துக்
கொண்டிருந்தனர்
அக்காவும் தம்பியும்..

## அகிலா கோவிந்த்



மாசு மருவற்ற இந்த பால் நிலா பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறது. பார்த்தாயா தம்பி? என்றாள் நிர்மலா தன்னை மறந்த உற்சாகத்துடன்.

தம்பி என அழைக்கப்படும் பக்கத்து வீட்டுச் சிறுவனும் அவளால் அன்பாய் தம்பி என அழைக்கப்படும்அனந் என்ற அனந்தராமன் சிரித்தான். நிலா மட்டுமா அக்கா அதோ கரும் இருளில் கீற்றுகள் அசைய சலசலக்கும் தென்னங்காற்றும் எவ்வித சத்தமுமில்லாமல் இருக்கும் இந்த கும்மென்ற அமைதியும் கூட அழகாய்த்தானே இருக்கிறது?

அவன் பேச்சுக்கு மறுப்பு சொல்லாமல் தலையாட்டி ஆமோதித்தாள் நிர்மலா.

அத்தோடு நிறுத்தாமல் அடுத்து வீசிய வார்த்தைகள் அவளை திகைக்க வைத்தது "ஆனால்... இது... இதுவெல்லாம் நிரந்தரமா இருக்க... அனுபவிக்க கொடுப்பினை இல்லை போல் தெரிகிறதே அக்கா?" என்றான். கவலை பொங்க.

அவன் சொல்வதன் அர்த்தம் புரிந்து நிர்மலாவும் தவிக்கத்தான் செய்தாள். அதைவிட பச்சிளம் பாலகனாய் பத்து வயது சிறுவனாய் இருக்கும் அந்த தம்பி இந்த வயதிலேயே இதையெல்லாம் நினைத்து அவளுக்காக வேதனைப்பட வேண்டியிருக்கிறதே என ஆற்றாமையாகவும் இருந்தது.

விட்டால்... இதே போல் பேசி இன்னும் கவலைப்பட ஆரம்பித்து விடுவான் என நினைத்தவள் பேச்சை மாற்றும் விதமாய், "அதையெல்லாம்விடு. இப்போது இந்த நிமிடத்தை இந்த இயற்கையை ரஸிப்போம். நன்றாகத்தானே இருக்கிறது? அதோ பார் மர ஓரமாய் புதிதாய் அந்த தூக்கனாங் குருவி கூடு பார்த்தாயா நீ?" எனச் சொன்னதும் அனந்தராமன் ஆவலாகி அதைப் பார்க்க ஆரம்பித்து விட்டான்.

ஏதாவது சொல்லி அப்படி பேச்சைத் திருப்பி விட்டாலும் உள்ளூர அவளுள் பசலைபொங்கத்தான் செய்தது. அவள் சூழ்நிலையும் அப்படி பதினாறு வயதில் ப்ளஸ் டூ முடித்த கையோடு வீட்டிலேயே முடங்க வேண்டிய நிர்பந்தம் "மேல் படிப்பிற்கு நிறைய செலவாகும் ... நம்மால் முடியாத கண்மணி எனத் தந்தைகலங்கிய போது மேல் படிப்பு வேண்டாம். படித்தால் மட்டும் வேலையா கிடைக்கப் போகிறது. இதுவே போதும்...!" என சமாதானம் சொல்லி தந்தையின் மனக்குறையை நீக்கினாள்.

ஆனால் அவளுடன் படித்தவர்கள் எல்லாம் துள்ளிக் குதித்தபடி கல்லூரிகளுக்குச்செல்வதை வழியில் பார்க்கும் போது அவளுள் அந்த ஏக்கம் எழாமல் இல்லை. நிறையப் படித்து கல்லூரி விரிவுரையாளராய் ஆக வேண்டும். நிறைய பேச்சுப் போட்டிகளில் பட்டிமன்றங்களில் கலந்து கொள்ளவேண்டும் என்றெல்லாம் கனவு வைத்திருந்தாள்.

ஆனால் எல்லாமே அவள் ப்ளஸ்டு முடித்து ரிசல்ட் வரும் சமயமாய்ப் பார்த்து சதி செய்தது. ஒழுங்காய் மில் வேலைக்குப் போய் சம்பாதித்துக் கொண்டிருந்த தந்தைக்கு திடீரென வேலை போனது.

மில்லில் ஆள் குறைப்புசெய்கிறோம். நிறைய பேர் தேவையில்லை. என மில் நிர்வாகம் அறிவித்து அடுத்து ஒரே வாரத்தில் பத்தாயிரம் ரூபாயுடன் கணக்கு முடித்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் அவளது தந்தை.

நிர்மலாவின் தந்தை சதாசிவம் கொஞ்சம் தைரியமானவர்தான். ஆட்களை சேர்த்துக் கொண்டு மில் நிர்வாகத்திடம் சண்டை போட்டும் பார்த்தார். உண்ணாவிரதம். போராட்டம் என்றெல்லாம் இருந்து பார்த்தார்.

ஆனால் மில் நிர்வாகம் சில அரசியல் தலைவர்களை கைக்குள் போட்டுக் கொண்டு பிரச்சினையை அப்படியே அமுக்கிவிட்டது. இனி மில்லில் வேலை கிடைக்காது என்பது சதாசிவத்திற்கு தெரிந்து போயிற்று.

பத்து வருடத்திற்கு முன் மனைவியை நோய் ஒன்றில் பறி கொடுத்து விட்டு தாயில்லாகுழந்தைகளான நிர்மலாவையும் அனந்தராமனையும் வைத்துக்கொண்டு அவரால் என்ன செய்ய முடியும்? எப்படியும் உழைத்து அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பது போல் தனக்குள்ளே சூளுரைத்துக் கொண்டார்.

அதனாலே வேறு வேலை தேடுவோம் என ஐம்பத்து மூன்று வயதில் இளைஞர் போல் வேலைக்கு அலைந்து பார்த்தார். தடித்த அவர் உடல் பருமனையும் தள்ளாட்டமான அவரது நடையையும் பார்த்த யாரும் அவருக்கு இரக்கப்படவில்லை. வேலை தர முன் வரவில்லை.

அப்படியே தற்செயலாய் வேலை கிடைத்தாலும் இரண்டு மூன்று நாளில் பறி போய்விடும். ஏதேதோ காரணங்கள் சொல்லி நிறுத்தி விடுவார்.

சரி சொந்தமாய் ஏதாவது தொழில் செய்வோம் என சிறு பெட்டிக்கடை போல் தொடங்கி காய்கறி வியாபாரம் செய்து பார்த்தார். அதிகாலையில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு மார்க்கெட் சென்று பெரிய சாக்கு மூட்டையில் காய்கறிகளை வாங்கி வருவார்.

அவருக்கு ஒத்தாசையாய் நிர்மலாவும் கூட இருந்து காய்கறிகளை பிரித்து அடுக்குவாள். ஒரு மாதம் அப்படி வியாபாரம் செய்து கணக்குப் பார்த்ததில் முந்நூறு ரூபாய் நஷ்டமே ஏற்பட்டது.

வியாபார நெளிவு சுளிவு தெரியாததால், சிலருக்கு இரக்கப்பட்டு கடன் கொடுத்ததால் அது திரும்பி வராக் கடனாய் போய் இந்த நிலை ஏற்பட காய்கறிக் கடையையும் ஒரே மாதத்தில் மூட வேண்டியதாய் போயிற்று.

நிர்மலா சும்மா இருக்காமல் யோசித்து தன் தோழிகள் மூலமாய் கற்ற வயர் கூடைகள் பின்னும் முறையை தொழிலாக்கி கூடைகள் பின்னினாள். இரவு பகல் கண் விழித்து பல நிறங்களில் கூடைகளை உருவாக்கினாள்.



அதை சதாசிவம் கொண்டு பேரூர் சந்தைப் பகுதி கடைகளில் விற்க ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அவரது கூடைகளுக்கு உரிய விலையைகொடுத்துக் கொண்டிருந்த ஒரு சில கடைக்காரர்கள் அவரது அப்பாவித் தனத்தையும், அதட்டி பேசத் திராணியில்லாத சுபாவத்தையும் கண்டு பணத்தைக் கொடுக்காமல்.. இழுத்தடிக்க.. அந்தத் தொழிலுக்கும் மூடு விழா நடத்தப்பட்டது. அடுத்து என்ன செய்ய? என்று யோசித்த போது வீட்டுக்கார பெண்மணி நிர்மலாவிடம் பஜாரில் பேன்ஸி கடைக்கு ஆள் தேடுகிறார்கள். நீ போகிறாயா? இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் என்றபோது என்ன இரண்டாயிரம் ரூபாயா? என அதிசயத்துத்தான் போனார்கள்.

நிர்மலாவும் சதாசிவம் உடனே சம்மதம் சொல்லிவிட இரண்டுநாள் அந்த பேன்ஸி கடை வேலைக்குச் சென்று தான் பார்த்தாள். இரண்டு நாள் பிரச்சினையில்லாமல் சென்ற வேலையில் மூன்றாம் நாள் பேன்ஸி கடைக்காரரும் அவளை கூப்பிடும் சாக்கில் பேச்சு சாக்கில் முதுகில் தட்ட கைகளை பிடித்துக் கொள்ள பயத்தில் நடுங்கித்தான் போனாள் அவள்.

அன்று இரவு அந்த விஷயத்தை சதாசிவத்திடம் சொன்னதும் அந்த பேன்ஸி கடை வேலைக்கும் மூடு விழா நடத்தப்பட்டது.

"இனி நீ வேலைக்குப் போகிற பேச்சே வேண்டாம். உடம்பில் தெம்பிருக்கிற வரை நானே போகிறேன்.. " என உறுதியாய் சொல்லி விட்டார் சதாசிவம்.

அதன்படி இரண்டு நாட்கள் விடாமல் அலைந்து ஒரு வேலையைத் தேடிக் கொண்டார். அலுவலகம் ஒன்றில் செக்யூரிட்டி என்று சொல்லப்படும் நைட் வாட்ச்மேன் வேலை. மாதம் இரண்டாயிரத்து ஐநூறு சம்பளம்.

வீட்டு வாடகை ஐநூறு போக இரண்டாயிரம் ரூபாயை வைத்து நல்ல விதமாக குடும்பம் நடத்தி விடலாம் என சந்தோஷமாய் கணக்கு போட்டு இருவரும் குஷியாகி விட்டனர்.

சதாசிவத்திற்கும் அந்த வேலை பிடித்துப்போயிற்று. காக்கி உடுப்புடன் சும்மா உட்கார்ந்து விட்டு வருவதற்கு சம்பளமா? என்று தான் நினைத்தார்.

ஆனால் வேலை பார்க்கையில் தான் எவ்வளவு கஷ்டம் என்பது புரிந்தது. ஊரே தூங்குகிற வேளையில் அவர் மட்டும் தாயில்லாப் பெண் வீட்டில் நிர்மலாவை தனியே விட்டு விட்டு இப்படி கிடக்கிறோமே? என மனது அல்லாட ஆரம்பித்தது.

அவருக்கு மட்டுமா? நிர்மலாவுக்கும் அதே நிலைதான். அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து சிறு வயதிலே தாயை பறி கொடுத்ததிலிருந்து

அவளுக்கு எல்லாமே தந்தை தான் ஒட்டுப்புல்லாய் சிறு வயதிலிருந்து அவரையே சுற்றி வந்த பழக்கம் இப்போதும் தொடர்ந்தது.

அதனாலே இரவு வாட்ச்மேன் வேலைக்காக அவர் சென்றதும், அவரைப் பிரிந்த கவலையில் அவர் தூங்காமல் இரவு முழுவதும் விழித்திருப்பாரே என்ற நினைவில் அவளும் கொட்டக் கொட்ட விழித்திருப்பாள்.

இப்படி தந்தைக்காக அவளும்,அவளுக்காக தந்தையும் ஒருவரையொருவர் பிரிந்து வாடியதாலே இருவருக்கும் அந்த செக்யூரிட்டி வாட்ச்மேன் வேலையும் பிடிக்காமல் போயிற்று. அதனாலே இருவரும் முடிவெடுத்து அதற்கும் ஒரு நாள் மூடுவிழா நடத்தினர்.

அந்த நேரத்தில்தான் ஆபத்பாந்தவராய் சதாசிவத்தின் பழைய நண்பர் ஒருவர் தேடி வந்தார். அவர் பணத்தை வட்டிக்கு விட்டு சம்பாதிக்கும் தொழிலை செய்து நல்ல லாபம் பெற்றுக் கொண்டிருக்க சதாசிவத்திற்கும் அத்தொழிலைச் செய்ய ஆசையாயிற்று. அவர் கையில் மில் வேலை மூலம் கிடைத்த பணத்தில் ஏழாயிரம் ரூபாய் மிச்சம் இருந்தது.

நண்பர் தைரியம் கொடுக்க சதாசிவம் துணிந்து அந்த ஏழாயிரம் ரூபாயை முதலாய் போட்டு- வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலை ஆரம்பித்தார்.

ஓரிரு மாதங்கள் எவ்விதப் பிரச்சினையுமில்லாமல் நல்ல விதமாக தொழிலும் ஓடியது. கடன் வாங்கியவர்கள் தேடி வந்து வட்டியைக் கொடுத்துவிட்டுப்போக சதாசிவம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

இவ்வளவு நாள் இந்தத் தொழிலில் இறங்காமல் போய் விட்டோமே? என ஆதங்கப்பட்டு அகமகிழ்ந்தார்.

அவரது சந்தோஷம் ரொம்ப நாள் நீடிக்கவில்லை. அதிக வட்டி தருவதாக ஒரு வியாபார நண்பர் கேட்க மொத்த பணத்தையும் தூக்கி அவருக்கே கடனாய் கொடுத்தார் சதாசிவம்.

அப்படிக் கொடுத்ததால் வந்தது வினை. வியாபார நண்பர் பணத்தை தொழிலில் போட.. தொழிலில்பெரும் நஷ்டம். அந்த வியாபார நண்பர் சொல்லாமல் கொள்ளாமல் இரவோடிரவாய் ஊரைவிட்டு ஓடிவிட்டார்.

விதி மறுபடியும் விளையாடியது போல் செய்தி கேள்விப்பட்டு சதாசிவம் இடிந்து போனார். ஒன்றல்ல.இரண்டல்ல அவர் சேமிப்பாய் சொத்தாய் ஏழாயிரம் ரூபாய் பணமும் ஒரே நாளில் நிர்கதியாய் போயிற்று.



இரண்டு மூன்று நாட்கள் தந்தையும் மகளும் வெளியே எங்கும் போகாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி முடங்கிக் கிடந்தார்கள். நிர்மலா தான் இருக்கிற அரிசியைக் கொண்டு சோறு பொங்கினாள்.

மறுநாள் அதுவும் இல்லாமல் போய் அரை வயிறு கஞ்சிதான்

மிஞ்சியது. அன்று கஞ்சியையும் ஊறுகாயையும் கடித்துச் சாப்பிட்ட சதாசிவம் ஏதோ யோசனை தோன்றியவராய் பிரகாசத்துடன் நிமிர்ந்தார்.

"நான் வெளியில் ஒரு எட்டு நடந்து விட்டு வருகிறேன்.." என்று சொல்லியபடி கிளம்பிப் போனார்.

தந்தை யாரும் தெரிந்தவர்களை, நண்பரைப் பார்த்து ஏதுவும் உதவி கேட்பார் நல்ல வழி கிடைக்கும் என நினைத்தாள் நிர்மலா.

சதாசிவம் போனவர் போனவர்தான். மதியம் மணி மூன்றைத் தாண்டியும் திரும்பிய பாடில்லை.

இதோ அவருக்காகத்தான் வழிமேல்விழி வைத்து அந்த பழைய கிடுகிடு நாற்காலியில் உட்கார்ந்தபடி ரொம்ப நேரமாய் காத்திருந்தாள்.

ஆயிற்று ஒரு வழியாய் மணி நான்கை நெருங்கும் போது முன்புறமாய் தந்தை வரும் அரவம் கேட்டு உற்சாகமாய் நிமிர்ந்தாள்.

அவளது மை விழிக் கண்கள் அகல விரிந்து தந்தையையே ஆவலாய் பார்த்தன.

சதாசிவமும் தனது இடுங்கிய கண்களை விரித்தபடி அவளையே பார்த்தார்.

மெல்ல எழுந்து அவள் பக்கம் வந்தவர் நிர்மலாவின் தலையை ஆதரவாய் பேசினார்.

"நீ ஒன்றும் பயம் கொள்ள வேண்டாம் கண்மணி இன்னும் நம் கையை மீறி ஒன்றும் நடந்து விடவில்லை.." என்றார் நீளமான மூச்சுடன்.

தந்தையின் முகத்தை உற்று அவள் பார்க்க அவர் மெல்ல எழுந்து பரணில் இருக்கும் பழைய டிரங்குப்பெட்டிப் பக்கம் போனார்.

அந்தப் பெட்டியை எடுத்து தூசி தட்டி திறக்க ஆரம்பித்ததும் மதுராவின் ஆர்வம் அதிகமாய்த்தான் ஆனது.

என்னப்பா? என்ன செய்யப்போகிறீர்கள்.

சதாசிவம் தாடையைத் தேய்த்துக் கொண்டபடி அவளைப் பார்த்தார்.

"நிம்மிக்கண்ணு, உனக்கு அத்தை, பெரியம்மா என்றெல்லாம் சொந்தம் உண்டு. நீயும் அவர்களை சிறு வயதில் பார்த்திருக்கிறாயே. ஞாபகம் இருக்கிறதா?"

அப்பா கேட்டதும் நிர்மலாவுக்கு சுருக்கென ஞாபகம் வந்துவிட்டது.

அப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரி செண்பகம் பெரியம்மா கனகம் என்றெல்லாம் கேள்விப்பட்டது மட்டுமில்லாமல் அவர்கள் வீட்டுக்குச் சென்று விளையாடியது எல்லாம் காலைப் பனியாய் அவள் ஞாபகத்தில் படர்ந்திருந்தது. ஆனால் அச்சிறு வயது நினைவு இப்போது வளர்ந்துவிட்ட நிலையில் அவர்களது முகங்கள் ஞாபகத்திற்கு வர மறுத்தது.

"ஆமாம் நீங்கள் சொல்லும் உங்கள் சகோதரி செண்பகம் அத்தை ஞாபகம் இருக்கிறது..." என்றாள்.

சதாசிவம் தொடர்ந்தார்.

"நான்தான் ஒரு சின்ன விஷயத்திற்காக கோபித்துக்கொண்டு அவர்களது உறவே வேண்டாம் என வந்து விட்டேன். ஆனால் அவள் என்னை மறக்கவில்லை. விடாமல் மூணு மாதத்திற்கு ஒரு முறை கடிதம் போட்டுக் கொண்டுதான் இருப்பாள். இப்போது நம் பிரச்சினைக்கு அவள் உதவியைத் தான் கேட்கப்போகிறேன். அவள் ஒருத்தியால் தான் நம்மைக் காப்பாற்றி கரை சேர்க்கவும் முடியும்?"

"என்னப்பா சொல்கிறீர்கள்? அத்தையால் எப்படி நம்மைக் காப்பாற்ற முடியும்? அதிசயித்துதான் கேட்டாள் நிர்மலா."

"அம்மா ஒன்றை மறந்துவிட்டாயா? உன் அத்தையின் கணவர் உன் மாமா பாண்டியன் நல்ல உத்யோகத்தில் பணியாற்றுகிறார் அல்லவா. ஞாபகம் வருகிறதா?"

நிர்மலா புருவம் உயர கண்களை விரித்தாள். அவளுக்கு ஞாபகமும் வந்தது. பாண்டி மாமா பாண்டி மாமா என அவள் சுற்றி வருவாளே..அப்போதே மிடுக்கான அவரது போலீஸ் உடையையும் வீட்டில் கிடக்கும் லத்திக்கம்பையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தாளே?

யோசித்தவளுக்கு அப்பா சொல்வது போல் நல்ல வேலையில் இருக்கும் பாண்டி மாமாதான் இதற்குச் சரியான ஆள். அவர் மூலமாய்த்தான் இந்த ஏழ்மை இக்கட்டில் இருந்து நாம் தப்பிக்க முடியும் என்பதும் புரிந்தது.

"புரிகிறது...ஆனால் அப்பா..." என்று நிர்மலா இழுக்க நெற்றியைச் சுருக்கினார். சதாசிவம்.

"என்ன நிர்மலா?"



"பாண்டி மாமாவால் நமக்கு நன்றாக உதவமுடியும். ஆனால் அவர்கள் உதவ வேண்டுமே. உதவுவார்களா?"

சதாசிவம் தலையை படபடவென அசைத்து ஆமோதிக்கத்தான் செய்தார்.

"நீ சொல்வது புரிகிறதம்மா இவ்வளவு நாள் நாம் வேண்டாம் என விட்டுவிட்ட சொந்தம் முன் திடீரென்றுபோய் நின்று உதவி கேட்டால் என்ன செய்வார்கள்? ஆனால் எனக்கு செண்பகத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது. அவளுக்கு என் மீது பாசம் உண்டு. அவள் கண்டிப்பாய் நமக்கு உதவி செய்யத்தான் செய்வாள்."

சதாசிவம் ஆணித்தரமாய் சொன்னபடி டிரங்குப் பெட்டியிலிருக்கும் தனது சகோதரியின் முகவரியை தேடி எடுத்தார். அன்று மதியமே அதில் குறிப்பிட்டிருந்த தொலைபேசி எண்ணுக்கு போன் செய்தார்.

மறுநாளே அவர் எதிர்பார்த்த அதிசயமும் நடந்தது.



2

சதாசிவம் மிக விரைவாய் தன் சகோதரி செண்பகத்துடன் தொடர்பு கொண்டு முழு விபரத்தையும் அழாத குறையாய் சொல்லி விட்டார்.

அதன் பின்தான் வேலைகள் மின்னல் வேகத்தில் நடைபெற்றது. அடுத்த பஸ்ஸிலே செண்பகம் தன் கணவர் பாண்டியனோடு புறப்பட்டு வந்து விட்டாள்.

வீராப்பாய் கோபித்து பிரிந்திருந்த சகோதரனும் சகோதரியும் சந்தித்துக் கொண்டனர். தங்கள் பழைய கோப தாபங்களை மறந்து பாச மழை பொழிய ஆரம்பித்தனர்.

செண்பகம் ஆசை ஆசையாய் நிர்மலாவைக் கட்டிக் கொண்டாள். "நிர்மலா நீ இவ்வளவு பெரிதாய் அழகுக் குமரியாய் வளர்ந்து விட்டாயா!" என உச்சி முகர்ந்து வியந்தாள்.

வீட்டிற்குக் கூட்டிப்போய் எல்லா விஷயங்களையும் விளக்கினார் சதாசிவம்.

செண்பகத்திற்கு ஒரே கோபம்தான்.

"இவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கிறாய். என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே..நல்ல ஆளப்பா... நீ...!" என செல்லமாய் கடிந்தாள்.

"இதோ பாரப்பா இனியும் நீ இப்படி வயசுப் பெண்ணை வைத்துக் கொண்டு தனியே கிடந்து கஷ்டப்பட்டு அல்லாட வேண்டாம். பேசாமல் என்னுடன் வந்துவிடு. நிர்மலாவை இனி நான் பார்த்துக் கொள்கிறேன். என் பேச்சுக்கு மறுப்பு சொல்லாமல் உடனே கிளம்பு..!"

செண்பகம் விரட்டாத குறையாச் சொல்லி சதாசிவத்தை சம்மதிக்க வைத்தாள். நிர்மலாவுக்கும் ஒரே சந்தோஷம்தான் அத்தையும் மாமாவும் தங்கள் மீது காட்டும் அன்பையும் பாசத்தையும் எண்ணி பூரிக்கத் தான் செய்தாள்.

மறுநாளே வீட்டுச் சாமான்களை எல்லாம் பாக் செய்து லாரி ஒன்றில் ஏற்றிக் கொண்டு அத்தை மாமாவுடன் சென்னை நோக்கிக் கிளம்பி விட்டனர். சென்னை மாநகரம் காலைச் சூரியனின் ஆரஞ்சு வண்ணக் கதிர்களுடன் அவர்களை வரவேற்கத் தயாராகி கொண்டிருந்தது.



# 3

நிர்மலா நடப்பதை கொஞ்சமும் நம்ப முடியவில்லை., நடப்பது கனவா நனவா? என்ற பிரமிப்பே இருந்தது.

தந்தையும் அவளுமே மட்டும் குடும்பம் என்று எண்ணி இருந்தவளுக்கு இன்று மாமா, அத்தை, சித்தி, ஒன்று விட்ட பெரியப்பா அத்தை பெண் உதயா, சித்தி மகள் கௌரி, கடைக்குட்டி பாலு என ஒரு பெரிய உறவுப் பட்டாளமே சொந்தம் என வால் பிடித்துக் கொண்டு.

நெகிழ்ந்து போனவளாய் தந்தையின் கரங்களைப் பற்றிக் கொண்டு என்னப்பா இது?என வியந்து கேட்கத்தான் செய்தாள்.

அதற்கு சதாசிவம் அசட்டுப் புன்னகையுடன் "எல்லாம் என் மடத்தனம் அம்மா. வீண் வீராப்பு என்ற பிடிவாதத்தால் சொந்தத் தங்கை என்றும் பாராது ஒரு சின்ன விஷயத்திற்காக இருபது வருடங்களுக்கு முன் கோபித்துக் கொண்டேன்." என்றதும் "அப்படியா அது என்ன சின்ன விஷயம்?" என்றாள் நிர்மலா ஆவலாய்.

சதாசிவம் வாயைத் திறப்பதற்குள் நீ இரு உன் புறாக்கை நானே சொல்கிறேன் என சிரிப்புடன் முன் வந்தாள் அத்தை செண்பகம்.

"உன் தந்தை என் தம்பி இருக்கிறானே...அவன் அப்போது அந்த வயதில் சரியான குரங்குக்காரன் எதற்கெடுத்தாலும் மூக்கு நுனி சிவக்கிற கோபக்காரன். அவன் எங்களிடம் அப்படி கோபித்துக் கொண்ட சின்ன விஷயம் எது தெரியுமா."



"சொல்லுங்கள் அத்தை.."

"உன் மாமா போலீஸ் வேலை போக ஓய்வு நேரங்களில் துணி வியாபாரம் செய்கிறபடியால் அடிக்கடி வியாபார கொள்முதல் செய்வதற்காக வடநாடு சென்று வருவார். அப்படி ஒருமுறை பயணம் செல்லும்போது உன் தந்தை தனக்காக ஒரு நல்ல கம்பளிப் போர்வை வாங்கி வரும்படி கேட்டுக்கொள்ள, மாமாவும் சம்மதித்துக் கிளம்பி விட்டார். ஆனால் பார். உன் மாமா வியாபார மும்முரத்தில், அந்தச் சிந்தனையில் இந்தக் கம்பளிப் போர்வை வாங்குவதை மறந்து விட்டார். பயணம் முடிந்து வீட்டிற்குள் நுழைந்ததும்தான் அவருக்கு போர்வை வாங்காததே ஞாபகம் வந்தது. உடனே வருந்தியவராய் விஷயத்தைப் போய் உன் அப்பாவிடம் சொல்ல.. உன் அப்பாவுக்கு வந்ததே கோபம்.மாப்பிள்ளை..தன்னை மதிக்கவில்லை, தன்னை அலட்சியப்படுத்திவிட்டான் என தாம் தூம் என குதிக்க ஆரம்பித்து விட்டார்."

"என்ன ஒரு கம்பளிப் போர்வைக்கா...இப்படி ஒரு சண்டை."

நிர்மலா வியந்து கேட்க அடக்க முடியாமல் சிரித்த செண்பகம் மாப்பிள்ளையும், மச்சானும் மோதிக் கொண்ட அந்தக் கூத்தை நீயே உன் அப்பாவிடம் கேள். என்றபடி கைகாட்ட கூச்சத்தில் நெளிந்தார் சதாசிவம்.

அதை விடும்மா நான் அன்று அப்படி முட்டாள் தனமாய் நடந்ததற்கு இருபது வருடங்களாய் இவளையும் சொந்தங்களையும் பிரிந்து விதியிடம் நன்றாக கட்டு வாங்கி இருக்கிறேனே...இது போதாதா? பழையதை நினைத்து மீண்டும் மருகப் போன தந்தையின் தோள்களை அணைத்துப் பிடித்து சமாதானப்படுத்தியவள்.

"இப்போதுதான்... எல்லாம் சரியாகி விட்டதே. இனியும் பழையவைகளை ஏன் வருந்திக் கொண்டு நினைக்க வேண்டும்? சந்தோஷமாகவே நினைத்துப் பாருங்கள் என செல்ல அதட்டல் போட்டவள் நீங்கள் சொல்லுங்கள் அடுத்து என்ன நடந்தது..?" என்றாள். அத்தையிடம் ஆவலாய்.

"வேறு... என்ன? வேண்டுமென்றே போர்வையை வாங்கி வரவில்லை உரிய மதிப்பு தரவில்லை. என உன் அப்பா குதிக்க இல்லை..ஒரு சின்ன போர்வை விஷயத்திற்கு இப்படி கோபப்படுவது சரியில்லை. என உன் மாமா குதிக்க இரண்டு பேர்களுக்கும் பேச்சும் வார்த்தையும் தடித்து பெரும் சண்டையாய் போயிற்று."

"நீங்கள் தடுக்கவில்லையா?" நிர்மலா அத்தையிடம் கேட்க முகத்தை அஷ்டமாய் நொடித்தாள்.

"நடக்கும் இந்தக் கூத்தை பார்க்க நான் இருந்திருக்கவில்லையே? அன்று பார்த்து ஏதோ சினிமாவுக்கு அல்லவா பக்கத்து வீட்டு மாமியுடன்

சென்றிருந்தேன். அப்படி படம் முடிந்து வந்து பார்க்கும்போது இடி மின்னல் ஓய்ந்து இருவரும் முடிவும் எடுத்திருந்தார்கள்."

"முடிவா?"

"ஆம் இனி இரு குடும்பங்களுக்கும் எவ்வித ஒட்டும் இல்லை. உறவும் இல்லை என நான் வீட்டுக்குள் நுழைந்ததும் உன் அப்பா இதைச் சொல்லிவிட்டு சிறுமியான உன்னை இழுத்துப் பிடித்துக் கொண்டு தரதரவென திரும்பிப் பாராமல் கிளம்பியவர்தான். அதன் பின் இந்தப் பக்கம் வரவே இல்லை. எட்டிப் பார்க்கக்கூட இல்லை.." செண்பகம் முடிக்க சதாசிவம் அக்கறையாய் குறுக்கிட்டார்.

"அது.. இல்லை.. செண்பகம்.. ஒரு வருடம் கழித்து நான் கோபமெல்லாம் விலகி பதைப்புடன் உன்னைத் தேடி வந்தேன். ஆனால் அப்போது நீ பழைய வீட்டில் மட்டும் இல்லை.. ஊரையே காலி பண்ணி போயிருந்தாய். யாருக்கும் உன்னைப் பற்றிய விபரமோ முகவரியோ தெரியவில்லை. பின் என்ன செய்வது? விதியை நினைத்து நொந்தபடி ஊருக்குத் திரும்பி விட்டேன்..."

சதாசிவம் சொன்னதற்கு ஆமோதித்தபடி பலமாய் தலையாட்டினாள் அத்தை.

"நீ.. சொல்வது சரி.. மாமாவுக்கு டிரான்ஸ்பர் ஆகி விட்டதால் ஆறே மாதத்தில் ஊரைக் காலி பண்ணிவிட்டு சென்னையில் குடியேறி விட்டோம் அவசரமாகச் செல்ல வேண்டியிருந்ததால் அக்கம் பக்கம் தெரிந்தவர்களிடம் கூட விஷயத்தைச் சொல்ல முடியவில்லை ஒரு வழியாய் இருபது வருட வனவாசம் இப்போதுதான் முடிந்திருக்கிறது.

அத்தை சொல்லி முடிக்க அத்தையின் குட்டிப் பெண் உதயா அங்கு பேசுவதைக் கேட்டபடி வந்தவள் "ஒரு வழியாய் பாசக்கார அண்ணன் தங்கைகள் ஒன்று சேர்ந்தீர்களாக்கும்.." என்று கிண்டலடிக்க அங்கு சிரிப்பலை பொங்கியது.

சிரிப்பலை ஓய்ந்ததும் உதயா சதாசிவத்தை பார்த்தவள். "மாமா அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்" என்றாள். சீரியஸான பார்வை பார்த்துக் கொண்டே நிர்மலாவை.

"சொல்லும்மா... உதயா குட்டி..." என்றார் சதாசிவம் புரியாத உற்சாகத்துடன்.

"உங்கள் சேந்த புத்ரியும் இருபது வயது அழகுக் குமரியுமான நிர்மலாவை ஒரு இருபத்து நாலு மணி நேரம் பிடிவாரண்ட் செய்து எங்கள் கஸ்டடியில் நீங்கள் ஒப்படைக்க வேண்டும்.அவளை.. அவளை ..நாங்கள்"



"என்னம்மா செய்யப்போகிறீர்கள்?"

"பயப்படாதீர்கள் மாமா.உங்கள் அருமை மகளை நகரின் பிரபல் பிதீட்டி பார்லர் ஒன்றிற்கு கூட்டிச் சென்றுபத்தாம் பசலி போல் இருக்கும் அவளை மாற்றப் போகிறோம்..."

"ஐயையோ; அதெல்லாம்... வேண்டாம். நான் வர மாட்டேன் ..!" என்றாள் பிடிவாதக் குரலில் நிர்மலா.

"வேண்டாம் என்றால் விட்டு விடுவோமா?" என்றபடி உதயா கௌரியைப் பார்த்து கண் சிமிட்டி கௌரி பதிலுக்கு "ஆளுக்கொரு கை பிடித்து உன்னைத் தூக்கியே சென்று விடுவோம்..." என மிரட்டினாள்.

சொல்லியதோடு இல்லாமல் இருவரும் தூக்குவதுபோல் நிர்மலாவை மேலும் கீழும் பிடித்து பாவனை செய்ய ஓடத்தான் செய்தாள் நிர்மலா.

உதயாவும் கௌரியும் உட்புறமாய் ஓடிய அவளை விரட்டிக் கொண்டு போக சதாசிவம் சிரிப்புடன் இதை ரஸித்தபடி "சரியான வெகுளிப் பெண் ஒன்றும் தெரியாத அப்பாவி..!" என்றார்.

செண்பகம் அதைக் கவனித்து சிரித்தவள், "நீ ஒன்றும் பயப்படாதே அண்ணா. நம் வாண்டுகள் ஊரையே விற்று விடும் ஒரே நாளில் நிர்மலாவை அடியோடு மாற்றி விடும்.." என்றாள்.



4

செண்பகம் சொன்னது உண்மைதான் போலும் நிர்மலா வந்த இரண்டாம் நாளே அவள் பழைய டிரங்குப் பெட்டிகுடையப்பட்டது. உள்ளிருந்த அவளது கோட்டா சேலைகளை எடுத்துக் கொண்டு உதயாவும் கௌரியும் ஓடினார்கள். தங்களது டாப்ஸீகளையும் மிடிகளையும் களைந்து விட்டு அதை உடுத்தி அழகு பார்த்தார்கள்.

அன்று மாலையே நிர்மலாவை துணிக்கடை ஒன்றிற்கு தூக்காத குறையாய் கூட்டிப் போய் ஒரு டஜன் துணி மணிகளை நிர்மலாவிற்காக அள்ளிக் கொண்டு வந்தார்கள். எல்லாமே அவர்கள் செலக்ஷன்தான்.

சேலையில் பவ்யமாய் இருந்த நிர்மலாவை ஒரே நாளில் சுடிதாருக்கு மாற்றி துப்பட்டாவை சுற்றி விட்டார்கள்.புதிதாக நடை பயில்பவள் நடப்பது போல்தான் அந்த சுடிதாரில் வெட்கம் படர நெளிந்து குழைந்து நடந்து கொண்டிருந்தாள். மறுத்தால், கழற்றினால் உதை விழும் என்ற அவர்களது எச்சரிக்கைக்கு பயந்தே அன்று முழுவதும் சுடிதாரில் நிர்மலா நடமாடினாள்.

இது ஆரம்பம்தான் இனி வரிசையாய் மிடி, ஜீன்ஸ், ஷார்ட்ஸ் என எல்லாம் தொடரும் என்ற மிரட்டல் வேறு.

இனி என்ன கூத்தோ என தினம் தினம் நிர்மலா பயப்படத்தான் செய்தாள். அவள் அப்படி பயப்பட்டது போலவே ஒரு நாள் ஷாப்பிங் போகலாம் என நிர்மலாவை கூட்டிக் கொண்டு கிளம்பிய உதயாவும் கௌரியும் நேராய் நிர்மலாவை காம்ப்ளெக்ஸ் ஒன்றில் இருந்த பிரபல பியூட்டி பார்லரில் தள்ளாத குறையாய் திணித்து விட்டனர்.

அங்கு அவள் பிடிவாதமாய் மறுத்தும் அவளது இரட்டைச் சடை முடி ஒன்றாக்கப்பட்டு அழகான கூந்தலாக்கப்பட்டது. முன்புற கேசமும் சீராய் ஒதுக்கப்பட்டு ஒன்றிரண்டு முடிக் கற்றைகள் நெற்றியில் புரளும்படியான ஸ்டைல் வேறு. முகத்திற்கு பேஷ்வாஷ், ப்ளீச்சிங் ஸ்கின் ஸ்மூத்தர், ஹேர் ரிமூவர் பர்ஸ்ப்தீம் க்ளீனர் என ஏகப்பட்ட சமாச்சாரங்கள்.

ஒரு வழியாய் பார்லரில் இருந்து நிர்மலா வெட்கம் படர நாணிக் கோணி வெளி வந்தபோது அவளது அழகைப் பார்த்து உதயாவும் கௌரியும் உண்மையிலே அசரத்தான் செய்தார்கள்.

"வாவ்... உலக அழகிப் போட்டிக்குச் சரியான சாய்ஸ் இந்த முறை நீ வேண்டுமானால் கலந்து கொள்கிறாயா?" என கிண்டலடிக்கவும் வெட்கத்துடன் நழுவத்தான் செய்தாள் அவள்.

ஆனால் யாரும் பார்க்காத சமயமாய் கண்ணாடி முன் நின்று தன்னையே பார்த்த நிர்மலாவுக்கு பிரமிப்பாகவே இருந்தது. தனது முந்தைய தோற்றத்தை அப்பாவிக் களையை முற்றிலும் மாற்றி நாகரீகப் பொலிவு தோற்றத்தில் பிரதிபலிப்பதை உணர்ந்தாள்.

தோற்றத்தை மாற்றிய உதயா கௌரியின் செய்கைகளை விட அவர்கள் தன் மீது காட்டும் அன்பு, பாசம் அவளை நெகிழ வைத்தது. இவ்வளவு நாள் முன் பின் தெரியாதவர்களாய் இருந்து விட்டு திடீரென உறவு பந்தம் ஏற்பட்டதும் பாச மழையாய் அன்பைப் பொழிவதை நினைக்கும் போது அவளுள் மகிழ்ச்சி பெருகியது.

அதைவிட அத்தையும் சுற்றத்தாரும் அவர்களது ஏழ்மையான பொருளாதார சூழலை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தங்களுடன் அணைத்துக் கொண்டது நிர்மலா கொஞ்சமும் எதிர்பாராததுதான். அதற்காக அத்தையின் குடும்பத்திற்கு என்றென்றும் தான் நன்றிக்கடன் பட்டிருப்பதாக நிர்மலா நினைத்து உள்ளூர உருகவும் செய்தாள்.

அதே நினைப்பில் ஒரு நாள் இப்படித்தான் அத்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் திரையிட அவள் நன்றி தெரிவித்துப் பேச,



செண்பகம் அவள் கைகளைத் தட்டிச் சிரித்தவள் அட பெரிய மனுஷி போல் இப்படியெல்லாம் பேச வந்து விட்டாயா? என்று அதிசயித்து விட்டு,

நிம்மிகுட்டி நான் ஒன்றும் இதையெல்லாம் சும்மா செய்யவில்லை. உன்னைப் பற்றிய உள்ளூர ஆசையொன்றும் எனக்கு உண்டு. எனக் கூறி அவளை அதிரவும் வைத்தாள்.

நிர்மலா புரியாமல் விழித்து, என்ன அத்தை சொல்கிறீர்கள்? எனவும் மறந்து விட்டாயா? எனது செல்ல மகன். அதாவது உனது முறைப்பையன் வந்ததும் உங்கள் இருவருக்கும் பிடித்திருந்தால் கல்யாணம் என்னும் முடிச்சு ஒன்றையும் போடத் திட்டம் வைத்திருக்கிறேன். என்றவள் நிர்மலாவின் கண்கள் விரிய வியப்பதைப் பார்த்து.

"நீ அதற்காக எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை நான் சொல்வது போல் இருவருக்கும் பிடித்திருந்தால்தான் அதிலும் முக்கியமாய் உனக்குப் பிடித்திருந்தால்தான்..." என அழுத்தமாய் கூறி அத்தை முடித்திருந்தாள்.

மேலும் அப்போதுதான் அவளுக்கு அத்தையின் மகனைப் பற்றி சொன்ன விபரங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

மேனேஜ்மெண்ட் பற்றிய ஒரு வருட உயர் படிப்பு ஒன்றிற்காக கொல்கதா சென்றிருப்பதாகவும் இன்னும் பத்து நாட்களில் படிப்பெல்லாம் முடிந்து ஊர் திரும்புவதாகவும் அறிந்திருந்தாள்.

ஏதோ ஒரு ஆவலில் போட்டோ ஆல்பம் ஒன்றை உதயாவும் கௌரியும் புரட்டிக் கொண்டிருந்தபோது அதில் இருந்த அவளது அண்ணன் போட்டோவை நிர்மலாவும் பார்க்க முயன்றாள்.

அதைக் கவனித்த வாண்டு உதயா உடனே ஆல்பத்தை மறைத்துக் கொண்டு "அட.. முறைப் பையனை அத்தானை அவ்வளவு லேசில் பார்க்க விடுவோமா? போட்டோவில் எல்லாம் பார்க்க கூடாது. நேரில்தான் நேரிடையாகத்தான்! ஆனால் ஒன்று என் அண்ணனைப் பற்றி நானே பீற்றிக் கொள்ளக்கூடாது. இருந்தாலும் சொல்கிறேன். என் அண்ணன் ஒரு சூப்பர் கம்பீர பர்ஸனாலிட்டி பார்தால் நீ அப்படியே அசந்துவிடுவாய் அசந்து...!' உதயா சொல்லியபோது தான் வாய் பிளக்க கேட்டது எல்லாம் நிர்மலாவின் ஞாபகத்திற்கு வந்தது.

இப்போது அத்தை இப்படியொரு கல்யாண எண்ணத்துடன் இருப்பதை சொல்லியதும் அதை அதிர்ச்சியுடன் உணர்ந்தாலும், அந்த அதிர்வை விட முறைப் பையனை, அந்த அத்தான் எப்படி இருக்கக்கூடும்? என்று பார்க்கும் ஆவலே நாளுக்கு நாள் அவளுள் அதிகரித்துக் கொண்டிருந்தது.

"இன்னும் பத்து நாட்கள்... பத்து நாட்களேதான்... உன் முறை மணாளன் வரப் போகிறான். உன்னைப் பார்க்கப் போகிறான். டொட்ட...டொய்ங்ங்...."என உதயாவும் கௌரியும் அடிக்கடி ரன்னிங் கமெண்ட்ரி வேறு கொடுத்து நிர்மலாவை கேலி செய்து கொண்டிருந்தனர்.

அந்த நாளும் வந்தது. அத்தை பையன் கிரிதரன் உயர் படிப்பு முடிந்து வீடு திரும்பும் நாள். எல்லோரும் அவனை வரவேற்க ஒரு வேன் அமர்த்தி ரயில்வே நிலையத்திற்கே சென்று விட்டார்கள்.

நிர்மலாவுக்கு அவளையறியாமல் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டாலும் உள்ளூர ஒருவித பயமாகவும் இருந்தது. ஆள் ஆளுக்கு அவளைக் கேட்காமலே அவளது எண்ணத்தை அறியும் முன்பே, உன் முறைப்பையன் நீ கட்டிக் கொள்ள வேண்டியதுதானே? என கற்பனைக் கோட்டை கட்டி விட்டார்களே?

முதலில் கிரிதரன் யார்? அவன் எப்படி இருப்பான்? அவன் குணம் எப்படி? இதெல்லாம் அவளுக்குப் பிடிக்க வேண்டுமே ஒரு வேளை அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே பிடிக்காமல் போய்விட்டால் என்ன செய்வது இவர்களுக்காக சூழ்நிலைக்காக அவளால் அப்படி அவனைக் கட்டிக் கொள்ளத்தான் முடியுமா?

ரயில்வே நிலையத்தை அடைந்ததும் எல்லோரும் இறங்கி பரபரப்பாய் நடந்தனர். உதயாவும் கௌரியும் கூட அவளிடம் அதிகம் சளசளக்காமல் கேலி செய்யாமல் அண்ணனை பார்க்கும் வரவேற்கும் ஆவலை முகத்தில் தவழவிட்டபடி விரைந்து கொண்டிருந்தனர்.

அவர்களது பாசத்தை வியப்புடன் ரசித்த நிர்மலா கிரிதரனை பற்றி அவர்கள் சொல்லியதை எல்லாம் நினைத்துப் பார்த்தாள். நெடுநெடு உயரம் ஆளை மயக்கும் கம்பீர'

ஹாண்ட்சம் பர்சனாலிட்டி என்ற வார்த்தைகள் அவள் காதுகளில் ரீங்காரமிட்டு அர்த்தத்தைத் தேடியது.

ஒரு வழியாய் பத்து நிமிட காத்திருப்பிற்குப் பின் இதோ ட்ரெய்ன் வந்து விட்டது. பெரியவர்களும் வாண்டுகளுமாய் ஆள் ஆளுக்கு கிரிதரனின் கோச்சை கண்டுபிடித்து பெட்டியில் ஏற ஆரம்பிக்க நிர்மலா புதிதாய் வெட்கம் கொண்டவள் போல நாணிக் கோணி ஒரு ஓரமாய்த்தான் நின்று கொண்டிருந்தாள்.

அன்று பார்த்து உதயா பிடிவாதமாய் அவன் எடுத்துக் கொடுத்திருந்த பச்சை நிற சுடிதார் ஒன்றை அவளே அழகு பார்த்து நிர்மலாவை அணியச் செய்திருந்தாள்.



முதன் முதலில் அண்ணனைப் பார்க்கப் போகிறாய். ஒரே வீச்சில் ஆளை வீழ்த்த வேண்டாம்..? என்றபடி கொஞ்சம் பேஸ் க்ரீம்களை தடவி, முடி ஸ்டைலை கொஞ்சம் மாற்றி அவளை அலங்காரப் படுத்தியவள், "இப்போதுதான் தேவதை போல் ஜொலிக்கிறாய்..! நீ நிமிர்ந்து லேசாய் உன் மைவிழிக் கண்களை விரித்து ஒரு பார்வை பார்த்தாலே போதும். அண்ணன் அம்பேல்தான்.. ரதி தேவி போன்றவளான உன்னுடைய மன்மத பாணங்களில் அப்படியே நொறுங்கி விடுவான் நொறுங்கி..!' என்றதும் ச்சீ... என்றபடி விலகி ஓடினாள் நிர்மலா.

இப்போது பெட்டியோரமாய் அழகுப் பதுமை போல் நின்று போஸ் கொடுத்துக் கொண்டிருப்பது அவளுக்கே ஒரு மாதிரியாய்த் தோன்ற...இயல்பாகி அவளும் கூட்டத்தோடு கூட்டமாய் பெட்டியினுள் ஏறினாள்.

முகத்தில் புன்னகையொன்றை தவழ விட்டபடி இரண்டு மூன்று அடி நடந்தபோது வாண்டுகள் மாமா மாமா என பஞ்சரிப்புடன் புடைசூழ அவன் வந்து கொண்டிருந்தான்.

நெடு நெடு உயரம்..ஆளை ஊடுருவும் தீர்க்கமான பார்வை சுருளான முடி தவழும் பரந்த நெற்றி, கூரான மூக்கு முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர்மீசை, நடை உடை பாவனையில் ஒருவித அசாத்திய வேகம். முகத்தில் அந்த கம்பீரச்சிரிப்பு.

உதயா சொன்ன ஹேண்ட்சம் பர்ஸனாலிட்டி இது தானோ? கிரிதரன் இவன்தானோ? என ஒரு கணம் தன்னை மீறி வியந்தவள் அப்படியே கண்களை அகல விரித்துப் பார்க்க அவன் உற்சாக சிரிப்புடன் வாண்டுகள் படைசூழ வந்தவன் டக்கென நிர்மலா பக்கம் நின்று அவனும் அவளை உறுத்துப் பார்த்தான்.

அவன் பேசாமலே புன்னகைக்க நிர்மலா பதிலுக்கு புன்னகை த்தவள் உதயாவும் கௌரியும் தன்னை கலாட்டா பண்ணி அறிமுகப்படுத்துவதை விட தானே அவனிடம் அறிமுகமாகி விடுவது சரியெனத் தோண நா நான் நிர்மலா உங்களது உங்களது... அத்தைப் பெண் என சொல்ல வந்தவள் டக்கென வாய் குழறி உங்களது முறைப்பெண் என்று சொல்லி முடித்தாள்.

அவன் பார்வையை உயர்த்தி வியப்பாய் கண்களை விரித்தவன் என்ன எனது முறைப் பெண்ணா? அப்படியானால் என்னை கட்டிக் கொள்ளப் போகிற பெண் நீதானா? என குரலை உயர்த்தவும் சட்டென முகம் சிவக்க குனிந்தாள் நிர்மலா.

அவள் குனிந்து வெட்கப்படுவதை ரசித்துப் பார்த்தவன் சட்டென, பின்புறமாய்த் திரும்பி சொன்ன வார்த்தைகள்தான் நிர்மலாவை அப்படியே தூக்கி வாரிப் போடச் செய்தது நிர்மலாவை.

“கிரிதர் இங்க பாராடா ஒரு மிஸ் குயீன் நீ என என்னை நினைத்துக் கொண்டு என்னென்னமோ என்னிடம் பேசிக் கொண்டிருக்கிறது..” என்றதும் தான் மின்னல் வெட்டியது போல் நிர்மலா நிமிர்ந்தாள்.

கிண்டலாய் பேசிய அவனுக்குப் பின்புறமாய் உதயாவையும் கௌரியையும் சிரித்து கேலி செய்தபடி உண்மையான கிரிதரன் வந்து கொண்டிருந்தான்.



## 5

நிர்மலா ஒரு கணம் அதிர்ந்து விட்டாள். என்ன ஒரு மடத்தனம் கிரிதரன் யார் என்று கூட உணராமல் யாரிடமோ போய் பேசி வலிய வழிந்திருக்கிறாளே.

பின்புறமாய்ப் பார்த்தாள் சற்று மாநிறத்தில் அதே நெடு நெடு உயரத்தில் ஓரளவு கம்பீரத்துடன் அவன் அவன்தான் உண்மையா கிரிதரனா?

அப்படித்தான். இருக்கவேண்டும் தங்கைகள் உதயாவும் கௌரியும் நச்சரிக்க வரும் அவனைக் கவனியாமல் யாரையோ கிரிதரன் என்று நினைத்துவிட்டாளே?

என்ன ஒரு அவசரத்தனம்..! அதைவிட அந்த யாரோ போய் முறைப் பெண் அது இது வென உளறி வெட்கப்பட்டு வேறு தொலைந்திருக்கிறாளே.

யாரவன் இப்படி திடுதிப்பென்று வந்து வழிந்து தன்னைப் பற்றி என்ன நினைப்பான் என்றெல்லாம் நினைப்பு ஓடியது.

ஒரு கணம் நிர்மலாவின் நிலை சுந்தர காண்டத்தில் சீதாப்பிராட்டியாரைத் தேடி லங்காபுரியினுள் நுழைந்த அனுமாரின் நிலையை ஒத்திருந்தது.

அனுமார் லங்காபுரியினுள் நுழைந்த அனுமாரின் நிலையை ஒத்திருந்தது.

அனுமார் லங்காபுரியில் நுழைய முயன்றபோது பெரும் காவல் படை ஒன்று நகரை விழிப்புடன் பாதுகாத்து வருவதை கவனித்தார். எப்படி நுழைவது என யோசித்தவர் வெகு சிறு உருவு கொண்டுதான் நுழைய வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்.



அதனாலே ஈயினை நிகர்த்த மிகச் சிறிய உருவினை மேற்கொண்டு ஸ்ரீராமனை வந்தனை செய்து கொண்டே லாகவமாய் நகருக்குள் நுழைய ஆரம்பித்தார்.

ஆனால் இலங்கையின் நகர் வாயிலில் லங்கிணி என்ற அரக்கி எதிர்கொண்டே லாவகமாய் நகருக்குள் நுழைய ஆரம்பித்தார்.

ஆனால் இலங்கியன் நகர் வாயிலில் லங்கிணி என்ற அரக்கி எதிர்கொண்டு அனுமாரை வம்புக்கிழுத்ததாள். என்னைக் கவனியாமல் செல்கிறாயா? நான் யாரென்று தெரியாதா? என்றெல்லாம் கர்ஜித்து சண்டைக்குத் தயாரானாள். அனுமார் அவளை துவம்சம் செய்தார்.

அதே போல் தான் நிர்மலா கிரிதரனை சந்திக்க நினைத்த இடத்தில் சம்பந்தமே இல்லாமல் இன்னொருவன் வந்து அவளை வம்பிக்கிழுத்து...கிண்டல் செய்து. ஒரே நிமிடத்தில் அவளைக் கேலிப் பொருளாகவும் அல்லவா ஆக்கிவிட்டான்.

யாரவன்? என சினமாய் நினைத்தவள் பெரியப்பாவின் சிறு வாண்டுகள் சகஜமாய் அவனுடன் பேசி விளையாடுவதைப் பார்த்து அவன் அத்தை பெரியப்பா குடும்பத்திற்கு நன்கு அறிமுகமானவனாய்த்தான் இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள்.

சட்டென ஏற்பட்ட அதிர்ச்சியில் அவள் அப்படியே திகைத்தது ஸ்தம்பித்து நிற்பதை வெகுவாய் ரசித்த அவன் விடாது “அட.. அழகுப் பதுமை என்றுதான் நினைத்தேன் கற்சிலை போல் ‘போஸ்’ எல்லாம் கொடுக்கிறதே. அப்படியே ஒரு நாட்டிய அபிநயம் ஒன்றைப் பிடித்தால் மியூசியத்திலோ கோயில் சிற்பங்களுடனோ தூக்கிப் போய் நிறுத்தி விடலாம்!” என அடக்க முடியாத சிரிப்புடன் கேலியைத் தொடர சினமாய் முறைத்தாள் அவள்.

“மிஸ்டர் நீ... நீ.. நீங்கள்.. நீங்கள் யார்?” வெகுண்டு போயிருந்தாலும் திக்கித் திணறியே பதட்டமாய் அவளில் இருந்து வார்த்தைகள் வெளிப்பட்டது.

அவனோ அவள் கோபத்தை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் அவளைக் கேலி செய்வதில் சுவாரஸ்யமானான்.

“அட அதற்குள் அது உங்களுக்கே மறந்து போயிற்றா? நீங்கள் தானே சொன்னது..நான் உங்கள் முறைப் பையன் என்று! எங்கே என்னை கொஞ்சம் நன்கு பாருங்கள் நான் எப்படி உங்களுக்கு பிடித்தவனாய். மனசுக்கு ஏற்பவனாய் இருக்கிறேனா? என்று சொல்லியபடி தன் தலையைச் சிலுப்பிக் கொண்டு ஒரு ஸ்டைல் பார்வை அவளைப் பார்க்க மிகவும் எரிச்சல் கொண்டவளாய் பற்களைக் கடித்தாள்.நிர்மலா

அதற்குள் உதயாவும் கௌரியும் கிரிதரனோடு வந்தவர்கள் அட இங்கு என்ன கூத்து நடக்கிறது? என வியக்க ஆரம்பிக்க அவன் அவர்களிடமும் போட்டுக் கொடுப்பது போல் விவரிக்க ஆரம்பித்து விட்டான்.

"கூத்துதான் முறை மாமன் கூத்து!" என்றபடி திரும்பவும் ஆரம்பிக்க காதுகளை பொத்திக் கொண்டாள் நிர்மலா.

அதற்குள் கௌரி சிரிப்புடன் நிர்மலா பக்கத்தில் ஓடி வந்தவள் "அட... அவசரத்தைப் பாரேன். நான் தான்அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அவள் கைகளை பிடித்து இழுத்துக் கொண்டுஅவளது நிஜமான அண்ணன் கிரிதரன் பக்கம் போய் நிறுத்தினாள்.

"அண்ணா இதுதான் நிர்மலா லெட்டரில் போனில் எல்லாம் ஒரு அழகி நம் வீட்டுக்கு வந்திருப்பதாய் சொல்லியிருந்தேனே அந்த அழகி இவள்தான்..! செய்தாள் நிர்மலா.

குனிந்தவளின் தலையை கௌரி கரங்களால் வேண்டுமென்றே நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு இதோ பாரம்மா இவர்தான் என் அண்ணன் கிரிதரன் உன் அத்தான். உன் முறைப் பையன் எல்லாம் இனி இவரை சுடித்துத் திங்க வேண்டியது உன் பாடு என்று அடக்க முடியாத சிரிப்பில் சொல்லியபடி அறிமுகப்படுத்தினாள்.

"சீ.. சும்மா இரு..!" என அவளை அதட்டியபடி இரு கரம் கூப்பியவள் பவ்யமாய் கிரிதரனுக்கு நமஸ்காரம் செய்தாள்.

பதிலுக்கு வணக்கம் போட்ட கிரிதரனும் ஒரு கணம் அதிசயித்து விழிகள் விரியத்தான் அவளைப் பார்த்தான்.

கௌரி சொன்னது தப்பில்லை. நிச்சயம் இவள் அழகிதான். அதுவும் பேரழகி. அந்த பளபள கன்னக் கதுப்புகளில் சின்னதாய் குழியொன்று விழ மெல்ல முத்துப் பற்களைக் காட்டி ஒரு புன்னகையை ஓட விடுகிறாளே. அந்த பூவிதழ் சிரிப்பு ஒன்ற போதுமே இவளது அழகை பறை சாற்ற.

உள்ளூர ரொம்பவும் வியந்தவனாய் நிர்மலாவின் மேல் வைத்திருந்த கண் பார்வையை ஒரு நிமிடம் அகற்றாமல் அவளையே உற்றுப் பார்க்க கவனமோ நிர்மலாவின் தன்னை கிண்டலடித்து தலையில் கேலிக் குட்டு வைத்த அவன் மீதே படர்ந்தது.

சரியான திமிர்க்காரனாய் இருப்பானோ. அவள் அறியாமல் கவனப் பிழையாய் செய்த தவறை இப்படி பெரிசு படுத்தி எல்லோர் முன்னிலையிலும் தான் முறைப் பையனைத் தேடி அலைந்தது போல் அவமானப்படுத்தி விட்டானே.



இவனை என்ன செய்வது? எப்படியாவது இவனையும் மட்டம் தட்டி இவன் தலையிலும் ஒரு குட்டு வைக்க வேண்டுமே என எண்ணினாள் அவள்.

ஆனால் அவனோ அதற்கு இடம் கொடுக்காமல் அவளை இன்னமும் வாரி விடுவதிலே இருந்தான் போலும். அவள் கிரிதரன் பக்கம் நின்று நமஸ்கரிப்பதைப் பார்த்தவன் வாண்டுகளைப் போகச் சொல்லிவிட்டு கிரிதரன் பக்கமே வந்தான். வந்து கிரிதரனின் தோள்களை அழுந்தத் தட்டி நிர்மலாவிடம் காட்டினான்.

இவர்தான் உங்களது உண்மையான முறைப் பையன் இப்போதாவது மூச்சு வந்ததா? பார்த்து விட்டீர்களா? திருப்திதானே? என அவன் பாட்டுக்கு கேள்விகளை அடுக்கிக் கொண்டு போக அவனை முறைத்தாள் அவள்.

அந்த முறைப்பிற்கும் புது அர்த்தம் கற்பித்தான் அவன்.

"அட... முறைப் பையன் இவன்தான் என்கிறேன்? இன்னமும் நீங்கள் நம்பவில்லை? உங்கள் முறைப்பையன் இவன்தான் நீங்கள் முறைக்க வேண்டியது இவனைத்தான்..!"

கைவிரலால் கிரிதரனை சுற்றிக் காட்டியபடி மறுபடியும் சிரிக்க ஆரம்பிக்க அடடா யாரிவன்? இப்படி விழி பிதுங்குமளவுக்கு ரவுண்டு கட்டி அடிக்கிறானே என நிர்மலா தவிக்க அவள் நிலையை அறிந்தவள் போல் உதவிக்கு வந்தாள் உதயா.

"ஐயோ...! போதும் நிர்மலா போதும்! உங்கள் கிண்டல்களுக்கெல்லாம் தாங்க மாட்டாள்.! அவள் கிராமத்துக்காரி. நாங்களே இப்போதுதான் கஷ்டப்பட்டு அவளுக்கு பட்டணத்து விஷயங்களை நடைமுறைகளைக் கற்றுக் கொடுத்து வருகிறோம்.

நீ அதை தடுத்து அவளைக் குழப்பி விடாதே என சிரிப்பை அடக்க முடியாமல் சொன்னாள் உதயா.



## 6

அன்றைய இரவு முழுவதும் நிர்மலா மனதை தூங்கவிடாதபடி அவன் அந்த திமிர்க்காரன் ஆக்கிரமித்துக் கொண்டான் என்றுதான் சொல்லவேண்டும்.

என்ன ஒரு ஆவணம் திமிர் அவனுக்கு கொஞ்சம் விட்டால் அவளைக் கேலி செய்தே அழ வைத்து விடுவான் போலிருந்ததே.

விடாமல் சுற்றி வந்து...அவள் திக்கித் திணறுவதை ரசித்துப் பார்த்தானே.

அவளும் யோசித்து பார்த்தாள் சரியான பதிலடியாய் ஏதாவது சொல்லி நாலு வாங்கு வாங்கலாமே என்று நினைத்தாள். ஆனால் கடைசி வரை பதிலடி கொடுக்க அவளுக்கு வார்த்தைகள் அகப்படவில்லை.

தப்பித்து விட்டான்.

அதற்குப்பின் கிரிதரனை தடபுடலாய் வீட்டுக்கு அழைத்து வந்தது, கிரிதரனின் பெரிய மேனேஜ்மெண்ட் படிப்பு பற்றி, அவன் அந்த தினிவர்ஸிட்டி தேர்வில் தங்க மெடல் வாங்கியிருப்பது பற்றியெல்லாம் ஆள் ஆளுக்கு பேசி சிலாகித்துக் கொண்டிருந்தார்கள்.

அவை யாவும் எதுவும் நிர்மலாவின் காதுகளில் ஏறவில்லை. அவளது கவனம் முழுவதும் அந்த திமிர்க்காரனிடமே இருந்தது. யார் அவன்? கிரிதரனுக்கும் அவனுக்கும் என்ன உறவு? என்றே யோசித்தவள் கொஞ்ச நேரத்தில் அதைக் கண்டு பிடித்தாள்.

அவன் கிரிதரனின் உற்ற உயிர் நண்பன் எனவும் ஆறு மாத கால தமிழ் பி.ஹெச் டி. படிப்பு ஆய்வு சம்பந்தமாக சென்னை வந்திருப்பதாகவும் கிரிதரனுடன்தான் அவன் வீட்டில் தங்கியிருக்கப் போவதாகவும் சளசளத்த உதயா கௌரியின் பேச்சுகள் மூலம் புரிந்து கொண்டாள்.

இனி மாமா வீட்டில் தங்களுடனே அவனும் தங்கப் போகிறானா?. என்ற்து பயமாய் எழுந்தாலும் இனி பயம் தேவையில்லை மோதினால் ஒரு கை பார்த்து விடுவோம் என்ற தைரியமும் எழுந்தது.

யாரென்று தெரிந்தாயிற்று அவன் பெயர் என்னவாக இருக்கக் கூடும்? என அடுத்து அவள் சிந்தனை ஓடிற்று காதுகளை மறுபடி தீட்டி பேச்சுகளை கவனித்தாள்.

எல்லோரும் அண்ணா அண்ணா எனக் கூறி சிலாகித்துக் கொண்டிருந்தார்களே தவிர யாரும் அவன் பெயர் சொல்லி அழைக்கக் காணும்.

என்ன பெயரே இல்லாமல் ஒருவன் இருப்பானா? மிஞ்சிப் போனால் ராம்ஸ் ரவி மகேஷ் முகேஷ் அபி ரிஷி என ஸ்டைலாய் ஏதாவது பெயரைத்தான் இவனைப் போன்ற ஆட்கள் வைத்துத் தொலைத்திருப்பார்கள் எனவும் கொதிப்பாக நினைப்பு ஓடியது.

ஆனாலும் மனதில் விடாது அவன் பெயர் என்னவாக இருக்கக்

கூடும்? என்ற சிந்தனையே கேள்வியாய் மாறி மாறி துளைத்தபோது எரிச்சலாகவும் உணர்ந்தாள்.

அவன் பெயர் என்னவாய் இருந்தால் நமக்கென்ன? என நினைப்பில் அவளால் ஒதுக்கவும் முடியவில்லை. அதே நேரம் அவனது பெயரை பற்றியே



நினைத்துக் கொண்டிருக்கிறோமே...அப்படி என்ன பெரிய மனிதனா இல்லை தேவேந்திரனா அவன்? அட சட்...என்ன இது..?

மற்றொரு நினைப்பு சினமாய் தோன்றி அழுத்திய போதுதான் அவள் காதுகளில் பெரியம்மாவின் அந்த வார்த்தைகள் ஒலித்தது.

தேவேந்திரன் எப்படி இருக்கிறாயப்பா? உன்னைப் பார்த்து வெகு நாட்களாயிற்றே?

பெரியம்மாவின் குரலும் தேவேந்திரன் என்ற பெயரும் பொட்டிலடித்த மாதிரி இருக்க துள்ளியவளாய் திரும்பிப் பார்த்தாள்.

பெரியம்மாள் அவனை அந்த திமிர்க்காரனைத்தான் வாஞ்சையாய் தேவேந்திரன்..என நிறைய அழைத்துக்கொண்டு?

அட ஒரு பேச்சுக்குத்தான் இவன் என்ன பெரிய தேவேந்திரனா? என்று நினைத்தாள்.ஆனால் இப்போது நிஜமாக நிஜமாகவே இவனது பெயர் தேவேந்தரன் தேவேந்திரன்தானா?

அவள் வியக்க எல்லோரும் தேவேந்திரன் என விளித்துப் பேசியது உரைத்தது., இவனுக்குப் போய் தேவேந்திரன் என்ற அழகான பெயரா?கொடுமைடா சாமி எனவும் சலித்தாள்.

அன்று மாலையே அவனும் அவனாகவே வந்து தன்னை அறிமுகப்படுத்தும் சாக்கில் ஹலோ என் பெயரையும் தெரிந்து கொள். என் பெயர் தேவேந்திரன்.தேவர்களுக்கெல்லாம் அதிபதி..என கொக்கரிப்பு வார்த்தைகளை வீச அவளும் பதிலடியாய் அதிபதி தான்... ஆனால் தேவர்களுக்கு அல்ல.. அரக்கர்களான அசுரர்களுக்கு..சொல்லி அவனைப் போலவே ஒரு கேலிச் சிரிப்பு சிரித்து விட்டு அகன்றிருந்தாள்.

இவன் யாரோ கொஞ்சநாள் வந்து தங்கி விட்டுச் செல்கிறவன். இவனது பேச்சுக்களுக்கெல்லாம் அலட்டிக் கொள்ளக்கூடாது என முடிவும் எடுத்திருந்தாள்.

ஆனால் அவள் நினைத்தாலும் அவளையறியாமல் அவனைப் பற்றிய எண்ணமே அவளைப் பிடித்து விரட்டிக் கொண்டிருந்தது. வீட்டினுள் எங்கு சென்றாலும் எந்தப் பகுதியில் நடந்தாலும் அவன் அங்கு தென்படுகிறானா..இல்லையா என்பதை உறுதிப்படுத்திவிட்டுத்தான் சென்றாள்.

மெல்லும் வாயினுள் அவலை இடித்துக் கொடுத்தாற் போல் வீணாய் அவனிடம் அகப்பட்டு தவிக்க வேண்டாம் என்றே விலகி நடந்தாள் நிர்மலா.

இதில் பெரிய வேடிக்கையாய் அவள் தேவேந்திரனை பற்றி சினமாய் நினைத்துக் கொண்டிருந்ததாலே கிரிதரனைப் பற்றி அவள் நினைக்கவோ..ஏன் அவனைக் கண்டு கொள்ளவில்லை என்று கூட கூறலாம்.

அதனாலே கிரிதரன் எத்தனையோ முறை அவளிடம் வந்து பேசிய போதும் சுவாரஸ்யமில்லாமல் அசட்டையாகவே பதில் சொன்னாள்.

கிரிதரன் தன்னைப் பற்றி, தனது மேனேஜ்மெண்ட் படிப்பு பற்றி, தான் விரைவில் சொந்தமாய் ஆரம்பிக்க இருக்கும் கன்ஸல்டன்ஸி பற்றியெல்லாம் விளக்கமாய் விரிவாய் அவளிடம் பேசியபோது எதுவுமே உரைக்கவில்லை. அவள் மண்டையில் எதுவும் ஏறவில்லை.

ஆனால் அதே போல் தேவேந்திரன் அவளிடம் வந்து தான் சங்க காலப் பெண்களின் குணநலன்கள் பற்றிய ஆய்வில் இருப்பதாய்ச் சொன்னபோது அவளையறியாமல் ஆவல் ஏற்பட்டது. அதனாலே, ,சங்க கால மன்னர் பராக்கிரம பாண்டியர் தேவேந்திரனுக்கு தேவையான சரியான ஆராய்ச்சிதான் என கிண்டலடிக்கவும் முடிந்தது.

நிர்மலா முதன்முதலாய் சொட்டென தலையில் கட்டு விழுந்தாற்போல் உணர்ந்தது உதயாவும் கௌரியும் அந்தக் கேள்வியைக் கேட்ட போதுதான்.

"என்ன நிர்மலா அத்தான் கிரிதரனைப் பார்த்தாயா? உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்றதும் தான் அவள் தலையில் மின்னல் வெட்டி உண்மை உரைத்தது

அடடா மறந்தே போயிற்றோமே..? இவர்கள் எல்லோரும் கிரிதரனை அத்தான் முறைப் பையன் என்றெல்லாம் சொல்லி நமக்குக் கட்டி வைக்கும் கனவில் அல்லவா இருக்கிறார்கள்? என்பதை இம்முறை திகைப்பாய் திடுக்கிடலாய் உணர்ந்தாள் நிர்மலா.



## 7

நிர்மலா அத்தை செண்பகம் கேட்டு விடக் கூடாதே என அத்தையிடம் தனியே பேசுவதை சிக்குவதை தவிர்த்து வந்தவள் இன்று கிரிதரனிடமே வசமாய் மாட்டிக்கொண்டாள்.

அப்படி இப்படி என சுற்றி வளைக்காமல் நேரிடையாகவே கேட்டு விட்டான் கிரிதரன்.

அகன்ற விழிகள் மேலும் அகல ஒரு கணம் சிலையாகித்தான் போனாள்.



அவள் சட்டென அப்படி உறைந்து நின்றது கிரிதரனுக்கே திகைப்பை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

"நான் கேட்டது ஒன்றும் தப்பில்லையே..." என்றவன் "நான் இப்படித் திடீரெனஉன்னிடம் கேட்பத்ற்கு காரணமுமிருக்கிறது. வீட்டில் அவர்கள் பாட்டுக்கு உன்னையும் என்னையும் இணைத்து முறைப்பையன் அத்தை மகள் என்றெல்லாம் முடிச்சுப் போட்டு வருகிறார்கள். அது பற்றி நீ என்ன நினைக்கிறாய்? உன் அபிப்பிராயம் என்ன? அதைச் சொல்லு..முதலில்..." என்றான்.

இம்முறைதான் நிர்மலாவுக்கு பயம் விலகி மூச்சே வந்தது. நல்லவேளை காதல் அது இது வென தத்துப்பித்தாய் உளராமல் மிகத் தெளிவாய் நாசூக்காய் கேட்கிறான். அவன் எண்ணத்தை விட நம் எண்ணத்தை அறிய ஆவலாய் இருக்கிறான் இதுவும் ஒரு வகைக்கு நல்லதுக்குத்தான். தப்பித்துக் கொள்ளலாம்தான்.

ஓரிரு நிமிடம் யோசித்தவள் சட்டென எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் எந்த முடிவும் எடுக்கவில்லை.என்றாள் அவசரமாக.

சொல்லியபடி அவன் முகத்தை உன்னிப்பாய்ப் பார்க்க அவள் ஆச்சரியப்படும்படி முகம் மலர்ந்தான் கிரிதரன்.

"வெரிகுட்..! வெரிகுட்...!" திரும்பத் திரும்ப சொல்லியபடி உற்சாகமானான் அவன்.

"நிர்மலா உன் முடிவு மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறாய். உன்னைப் போல்தான் நானும் இந்த விஷயம் பற்றி இப்போது எந்த முடிவும் நான் எடுக்கவில்லை. எடுக்கும் நிலையிலும் இல்லை."

அவன் சொல்வது புரியாமல் நிர்மலா தலை சாய்த்துப் பார்க்க விளக்க ஆரம்பித்தான் கிரிதரன்.

"அதாவது நிர்மலா நான் இப்போதுதான் இந்த உயர் மேனேஜ்மெண்ட் படிப்பு முடித்து விட்டு கன்ஸல்டன்ஸி தொடங்க இருக்கிறேன். ஒரு இரண்டு வருடத்திற்கு என் கவனம் முழுவதையும் அதில் செலுத்தி கன்ஸல்டன்ஸி தொழிலில் வெற்றி பெறுவதுதான் என் லட்சியம். அப்படிச் செய்தால்தான் நான் படித்த படிப்பிற்கு ஏதோ கொஞ்சம் சாதித்த மன அமைதியாவது கிடைக்கும் அதனால் இந்த பேச்சுக்களை ஒரு இரண்டு வருடத்திற்கு அட்லீஸ்ட் ஒரு வருடத்திற்காகவாது தள்ளிப் போடலாம் என நினைக்கிறேன்".

அப்பாடி! என உள்ளுக்குள் நிம்மதி மூச்சு விட்டவள் "எனக்கும் அப்படி ஒரு எண்ணம் தான். எனது முடிவும் அதுதான்...!" என்றாள் மீண்டும் அதே அவசரத்துடன்.

அவள் சொன்னதை நம்ப முடியாத ஆச்சரியத்துடன் உற்றுப் பார்த்தான் கிரிதரன்.

அவளும் முதன் முறையாய் கண்களை அகல விரித்து அவனை நன்கு பார்த்தாள்.

நெடு நெடு உயரத்தில் வாட்ட சாட்டமாய் சுறுசுறுப்பாய்த்தான் தெரிந்தான் கிரிதரன். ஆனால் முகத்தில் ஒருவித கம்பீரம் ஆளை மயக்கும் வசீகரச் சிரிப்பு.. இல்லாதது. அவனை மதுராவுக்க சாதாரணமானவனாகவே காட்டியது.

மேலும் இந்த இரண்டும் அதாவது முகத்தில் கம்பீரமும் உதட்டில் வசீகரச் சிரிப்பும் அந்த தேவேந்திரனிடம் இருக்கிறதே அந்த திமிர்க்காரன் இடக்காய் பேசினாலும் அவன் பார்க்கும் ஒரு சாதாரணப் பார்வை கூட குறுகுறுப்பாய் அவள் உள்ளங்கை துளைக்கிறதே..!

அட.. சட்.. என்ன இது அவனையே நினைத்துக் கொண்டு? என அவள் எரிச்சலாக..முன்னால் நின்று கொண்டிருந்த கிரிதரனோ அவள் மனம் போன போக்கை உணராமல் அவள் இப்படி அழகாய் கண் விரித்து நம்மையே பார்க்கிறாளே..?" என குளிரத்தான் செய்தான்.

அதனால் கொஞ்சம் குறுகுறுப்பாய் உணர்ந்தவன் "என்ன நிர்மலா என்னை அப்படியொரு பார்வை பார்க்கிறாய்..?" என்றான்.

அப்போதுதான் நிர்மலா நினைவில் தேவேந்திரனை நினைத்தக் கொண்டு பார்வையால் கிரிதரனை வெறித்துக் கொண்டு இருக்கும் தன் நிலையை உணர்ந்து அவசரமாய் தலை தாழ்த்தினாள்.

கிரிதரனோ அதை அவள் ஆசையாய் பார்த் து வெட்கப்படுவது போல் நினைத்துக் கொண்டான்.

நீ மனதில் வேறு எதுவும் நினைக்கிறாயோ? என்றான் அதே ஆர்வத்துடன்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.." என்றவன் கிரிதரன் தன்னை வேறு மாதிரியாக உணர்வதை உணர்ந்து திடுக்கிட்டு அவசரமாய் பேச்சை மாற்ற நினைத்தவள் அதே வேகத்தில்.

"உங்கள் நண்பர் தேவேந்திரன்..." என சட்டென ஆரம்பித்து விட்டாள்.

"ஆமாம்....எனது டியர் ப்ரெண்ட் அவனுக்கென்ன..?" என கிரிதரன் சுவாரஸ்யமானதும் அவளுக்கு ஒரு கணம் என்ன பேச அடுத்து என்ன சொல்ல எனத் திணறியவள் வார்த்தைகளை முடிக்கும் விதமாக.



"அவர் ஏதோ தமிழ் படிப்பு.. சங்க கால ஆராய்ச்சி என்றெல்லாம் சொன்னார்..." என சமாளித்து முடிக்கவும் செய்தாள்.

"ஓ.. அதுவா? அவன் தமிழில் டாக்டர் பட்டம் பெற ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டிருக்கிறான். அது சங்க கால நடைமுறைகள்..பழக்க வழக்கங்கள் பற்றியது." எனச் சொல்லி வந்த கிரிதரன் சட்டென நிறுத்தி "ஆமாம். உனக்கு தமிழில் ஆர்வம் உண்டா நிர்மலா?" என்றான்.

நிர்மலா ஒரேடியாய் பேச்சை மாற்றும் மனநிலையில் இருந்தவள், அதே எண்ணத்தில், எனக்கு தமிழில்படிக்கும் ஆர்வம் பட்டம் வாங்கும் ஆர்வம் எல்லாம் இருந்தது. ஆனால் அது குடும்பச் சூழ்நிலை காரணமாக முடியாமலே போயிற்று. என்றாள் சலிப்புக் குரலில்.

அவன் அத்தோடு பேச்சை விடுவான் என பார்த்தால் நேர் மாறாய் சுறுசுறுப்பாகி விட்டான் கிரிதரன்.

"ஓ உனக்கு மனதில் அப்படியொரு குறைபாடு இருக்கிறதா? அதைக் கூட ஈஸியாய் நிவர்த்தி செய்து விடலாம் ..நிறைவேற்றி விடலாம்."

புரியாமல் விழித்தாள் நிர்மலா.

"புரியவில்லையா நிர்மலா உனக்கு நீ விரும்புகிறபடி தமிழில் படிக்கலாம் டிகிரி பட்டம் கூட எளிதில் பாஸாகி வாங்கி விடலாம்."

அவள் இன்னமும் திகைப்பு விலகாமல் பார்க்க நிதானமாய் விளக்கினான் கிரிதரன்.

நிர்மலா "நீ அஞ்சல் வழி முறையில் எதாவது யூனிவர்சிட்டியில் சேர்ந்து விடலாம். நேரிடையா பி.ஏ. தமிழ் படிப்பு படிக்கலாம். டிகிரியும் வாங்கிவிடலாம். மேலும் உனக்கு அப்படி படிக்க வழிகாட்டவும் படிப்பைச் சொல்லித் தரவும் சரியான ஆள் ஒருவர் கைவசம் இருக்கிறார்."

அவன் சொல்வதைக் கேட்டு படபடக்கும் விழிகளோடு நிமிர்ந்தவள் அப்படியா யார் அது என்றாள் ஆச்சரியமாய்.

"வேறு யார்? எனது நண்பன் தேவேந்திரன்தான் தமிழில் எம்.ஏ பட்டம் வேறு வாங்கியிருக்கிறான். உனக்கு சரியான வழிகாட்டி அவன்தான்."

கிரிதரன் அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டு போக அவலை நினைத்து உரலை இடித்த கதையாய் எதையோ விளையாட்டாய் பேசப் போய் பேச்சு எதிலோ வந்து நின்று விட்டதே என திகைத்தாள் நிர்மலா.

அதிலும் படித்து டிகிரி வாங்க வேண்டுமென அவன் அலைவது போலவும் அவளுக்கு அளவு கடந்த தமிழ் ஆர்வம் உள்ளது போலவும் எல்லாவற்றுக்கும் மேலாய் அந்த கிண்டல்காரன் கேலிக்காரன்

தேவேந்திரனிடம் அவள் மாணவி போல் படிக்க அல்லவா கிரிதரன் ஏற்பாடுகளைச் செய்துவிட்டான்?

இவனிடம் எப்படிச் சொல்வது? என்ன செய்வது இதை தடுப்பது? என யோசித்தவள் அப்போதைக்கு அவனிடம் இருந்து தப்பித்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தில் தலையை மட்டும் ஆட்டினாள். விடைபெற்று உள்ளே ஓடி விட்டாள்.

அதைவிட உதயாவும் கௌரியும் அவளுக்காக இன்னொரு ஏற்பாட்டைச் செய்து அவளை ஏறக்குறைய திகைக்கவே வைத்திருந்தனர்.

அவள் டிகிரி வாங்கினாள் மட்டும் போதாதாம். ஏதாவது தொழிலை அலுவலக வேலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமாம் அதுதான் அவளது வாழ்க்கைக்குஉபயோகமாய் சோறு போடுவதாய் இருக்குமாம்.

அப்படி நிர்மலாவுக்கு எதிர்காலத்தில் சோறு போடுவதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்திலிருந்து கிரிதரன் ஆரம்பிக்கும் கன்ஸல்டன்சியில் உதவியாளினியாக இருக்கும் வேலை.

ஆக அவளுக்கு தினம் காலை கிரிதரனுடன் அலுவலக மேனேஜ்மெண்ட் வேலையைக் கற்றுக் கொள்வதிலும் மதியம் தேவேந்திரனிடம் டிகிரி வாங்குவவதற்காக தமிழ் பாடங்கள் கற்றுக் கொள்வதற்கான டிசிசன் எனவும் பக்காவாய் ஒரு டைம் டேபிள் ஒன்று அவளது ஒப்புதல் இல்லாமலே தயாரிக்கப்பட்டது.

அதை ஏற்றுக் கொள்வதா நிராகரிப்பதா என ஒரு நாள் முழுவதும் யோசித்தாள் நிர்மலா. வேறு வழயில்லை கல்யாண பேச்சுகளில் கிரிதரனோடு தன்னை இணைத்துப் பேசும் ஏற்பாடுகளில் இருந்து தப்பிக்கவாவது அவள் இதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

உதயா கௌரியின் வினோத ஏற்பாட்டிற்கு பலியாடு போல் பவ்யமாய் தலையாட்டினாள் நிர்மலா.

அட கட்டிக் கொள்ளப் போகிறவள் என்றதும் கரிசனத்தைப் பாரேன் இப்போதே இந்த வரத்து வருகிறாயே கல்யாணத்துக்குப் பின்னால் அவளைத் தங்கத் தட்டில் வைத்துத்தான் தாங்குவாய்போல.

அத்தை சொன்னதற்கு அதை ஆமோதிப்பது போல் அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி கிரிதரன் போஸ் கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் நிர்மலாவிற்கு சிரிப்புதான் வந்தது.

இந்தப் பேச்சை எப்படி மாற்ற என அவள் தவித்துக் கொண்டிருந்தபோது உதவிக்கு பெரியம்மா வந்தார்கள் என்றதான் சொல்ல வேண்டும்.



தற்செயலாய் அவர்கள் பேசுவதை காது கொடுத்து கேட்டவள் அட செண்பகம் அவள் சொன்னாள் சரிதான் என்று விட்டு விடுவதா? நிர்மலா ரொம்பவும் வெகுளியாய் இருக்கிறாள். அவள் நாலு இடத்திற்குப்போய் வர வேண்டும் நாலைந்து வேலைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். பேசாமல் அவளை வேலை பழக அனுப்பு என்றாள் ஒரே போடாய்.

கிரிதரும் பதிலுக்கு பெரியம்மா சொன்னால் சரிதான் என பலமாய் தலையாட்ட அத்தையோ விடாது அங்கம் அலுவலகத்தில் நீ அவளுக்கு வேலையைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அந்தைவிட்டு விட்டு அலங்கார பொம்மை போல் அவளைப் பக்கத்தில் உட்கார வைத்து ரசித்துக் கொண்டிருந்ததால் அவ்வளவுதான் உன் வேலையும் கெட்டு விடும் எனவும் எல்லோரும் சிரித்தார்கள்.

நிர்மலா வழியில்லாது ஒரு அசட்டுச் சரிப்பை உதிர்த்தபடி அங்கிருந்து அகன்றாள்.



## 8

உதயாவின் ஏற்பாட்டின்படி மறுவாரம் முதல் நிர்மலாவுக்கு கிரிதரனின் கன்ஸல்டன்ஸியில் வேலைக்குப் போகும் போது ஆரம்பமாயிற்று.

தினம் காலை ஒன்பது மணிக்குபைக்கை எடுத்துக் கொண்டு வேலைக்குகிரிதரன் கிளம்பி விடுவான் வருகிறாயா? என்று கேட்டபடி முதல் நாள் அவளுக்காக காத்திருக்க, இது என்னடா வம்பு? என நீங்கள் போங்கள் கிரிதரன் நான் பஸ்ஸிலே வந்து விடுகிறேன். என்று கூறி அனுப்பி வைத்தாள்.

அடுத்த நாள் முதல் அவன் தினம் அப்படி அழைப்பதை அவனுடன் பைக்கின் பின்னால் செல்வதைத் தவிர்க்கவே காலையில் மெதுவாக வேலைகளைச் செய்து மெதுவாகவே கிளம்ப ஆரம்பித்தாள்.

கிரிதரனின் அலுவலகத்தில் இரண்டு மூன்று பெண்களும் உதவியாளர்களாய் பணிபுரிய அவளுக்கு ரொம்பவும் வசதியாய்ப்போயிற்று.

கிரிதரனே தவிர்த்து அவர்களுடனே இருந்து வேலையைக் கற்றுக் கொள்வது போல் நேரத்தை செலவழிக்க ஆரம்பித்தாள். எப்போதாவதுயதேச்சையாய் கிரிதரனின் ரூமுக்கு போக வேண்டியது இருக்கும். அது போன்ற சமயங்களில் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசி விட்டு வெளி வந்து விடுவாள்.

கிரிதரனும், வேலையில் பிஸியாக இருந்ததால் அவளைப் பற்றிய சிந்தனை இல்லாமல் வேலையில் லயித்துவிடுவான். எப்போதாவது நிமிர்ந்து அபூர்வமாய் பார்ப்பது போல் பார்ப்பான்.

இப்படித்தான் நிர்மலா இந்தக் கிளிப் பச்சை நிற சேலை உனக்கு ரொம்பவும் அழகாய் இருக்கிறது. என்றான். ஒரு நாள் பற்கள் புன்னகையொன்றை உதிர விட்டு ஒன்றும் பேசாமல் அகன்று விட்டாள் நிர்மலா.

அடாடா இவன் அழகை ரசிக்கும் அளவுக்கு நாம் உடுத்த ஆரம்பித்து விட்டோமோ? என நினைத்தவள் மறுநாள் முதல் அந்த கிளிப்பச்சை நிற சேலையை உடுத்துவதையே தவிர்த்து விட்டாள்.

காலை கன்ஸல்டன்ஸி கிளாஸ் கிரிதரனைப் பற்றிய பயத்துடனே செல்ல மதியம் நடக்கும் தமிழ் வகுப்பில் நிர்மலாவின் சுவாரஸ்யம் கூட்டிவிடும்.

வீட்டு மாடிப் போர்ஷனில் பால்கனியை ஒட்டிய ரூம் ஒன்று தேவேந்திரன் அவளுக்கு தினம் தினம் வகுப்பு எடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

மதியம் மூன்று மணிக்கு அவள் காத்திருக்க டாண் என கையில் கனத்த பைண்டு புத்தகங்களுடன் வேஷ்டியும் சட்டையுமாய் தமிழ் அய்யாவாகவே தோன்றி விடுவான் தேவேந்திரன்.

இது என்ன கோலம்? என அவன் வேஷ்டி சட்டையைப் பார்த்து நிர்மலா கிண்டலாய் கேட்ட போதும் தமிழ் கற்றுக் கொடுக்க தமிழர் உடையிலே வருகிறேன் என்பான்.

அவளுக்கு வகுப்பு எடுக்கும் ஒரு மணி நேரமும் தூய தமிழில் ஆங்கில கலப்பு சிறிதும் இல்லாமல் பேசுவதையே வழக்கமாய்க் கொண்டிருந்தான்.

அவனையே ரசித்தது போலவே அவன் பாடம் எடுக்கும் கம்பீரத்தையும் ரசிக்க ஆரம்பித்தாள் நிர்மலா. தெளிவான தமிழ் உச்சரிப்பு பேச்சிற்கு நடுவே இழையோடும் அதீத நகைச்சுவை, இயல்பான கிண்டல் என அவன் பாடம் நடத்தும்போது ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை அவளால் உடல் குலுங்கும் சிரிப்பு சிரிக்காமல் இருக்க முடியாது. விழுந்து விழுந்து தான் சிரிப்பாள் அவள்.

தேவேந்திரனின் குறும்புத்தனம் நகைச்சுவையுணர்வை தட்டியெழுப்பும் படியாகவே இருக்கும்.அதனாலே அவள் எவ்வித மனநிலையில் வந்தாலும் தேவேந்திரன் பாடம் எடுக்க ஆரம்பித்த ஐந்தாவது நிமிடத்தில் கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்து விடுவாள்.



இப்படித்தான் ஒரு நாள் சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள சோழ மன்னன் கிள்ளி வளவனைப் பற்றி தேவேந்திரன் வர்ணித்தான்.

அவன் கிள்ளி வளவன் பெண்களை மயக்கும் அழகுக் கொண்டவனாம். விரிந்த முகமும், பரந்த நெற்றியும், கன்னியரை வீழ்த்தும் காந்தக் கண்களும், நீண்ட மூக்கும், அடர்ந்த முறுக்குண்ட மீசையும் உடையவனாம். அவனது இரண்டு கருங்குன்றங்களைத் தாங்கி நின்றாற் போல் இருக்கும் தோள்களையும், அவனது அடர்ந்த மயிர்களையுடைய மார்பையும் கண்ட கன்னியர்கள் அப்படியே மதிமயங்கி தங்கள் முகத்தை அதில் புதைத்துக் கொள்ள தவிக்க ஆரம்பித்து விடுவார்களாம்.

அவன் புரவி மேல் ஏறி நகர் வலம் வருவது பார்ப்பதற்கு அரிய கண் கொள்ளாகாட்சியாம். அவன் கம்பீரமாய், கருவிழிகளில் மன்மதக் கணைகளை தாங்கியபடி வரும் காட்சி பார்க்கும் மருண்ட விழி மங்கையரின் உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொண்டு அப்படியே கசக்கிப் பிழியுமாம். அந்தப் பெண்களின் உடம்புநாளங்களை விண்ணென வீணையை மீட்டதுபோல கண்டி அவர்களின் மனதை வெறி கொள்ள வைக்குமாம்.

அப்படி வெறி வந்து அவன் மேல் பித்துப் பிடிக்காத குறையாய் அவனை நோக்கி தலைவிரி கோலமாய் கன்னியர் அனைவரும் ஓடி வர ஆரம்பித்து விடுவார்களாம். என்னை ஏற்றுக்கொள் என்னை ஏற்றுக்கொள் என அவன் காலடியில் விழாத குறையாய் கெஞ்சுவார்களாம்.

அப்படி குழுமி தவிக்கும் அந்த கன்னியர் கூட்டத்தில் தனக்குப் பிடித்த தன் மனதை கொள்ளை கொண்டு விட்ட அந்த மருண்ட மான் விழியாளை கிள்ளி வளவன் தேர்ந்தெடுப்பானாம்.

அப்படித் தேர்ந்தெடுத்து மற்ற கன்னியர் எல்லாம் வெம்பி வெப்ப மூச்சுகள் விட, தனக்குப் பிடித்வளை புரவியில் இழுத்து உட்கார வைத்தபடி சிட்டாய் பறந்து விடுவானாம் கிள்ளி வளவன்.

தேவேந்திரன் இலக்கியத்தில் வரும் இக்காட்சியை சொல்லி முடித்து விட்டு இந்த சோழ மன்னனுக்கு கிள்ளி வளவன் என பெயர் வைத்திருக்கக்கூடாது.. கள்ளிவளவன் என வைத்திருக்க வேண்டும். பொருத்தமாக இருந்திருக்கும் என்றபோது நிர்மலா அடக்க முடியாமல் சிரிசிரியெனத்தான் சிரித்தாள்.

மேலும் அக்கால மகளிர் எப்படி இருந்தனர் என்பதை சுவைபட அவளுக்கு விளக்கவும் செய்தான். பவளம் போன்ற நிறமும் மான் போன்ற பார்வையும் கிளி போல மழலைச் சொல்லையும் மென்மையான சாயலையும் கொண்டிருந்தனராம்.

அவர்களது கூந்தல் அழகைப் பற்றிச் சொல்ல வந்தவன் சிலப்பதிகாரத்தில் வரும் அழகிய வர்ணனை ஒன்றைச் சொல்லி விளக்கினான்.

# சமையல் டிப்ஸ்

## டூர் ரெசிபீஸ்

இந்த வருட சம்மர் வெகேஷன்ல்ல நீங்க டூர் மற்றும் பிக்னிக் போகலாம்னு ப்ளான் போட்டுக்கிட்டு இருக்கீங்கன்னு தெரியும். அதுக்காகவேதான் இந்த வெகேஷன் ஸ்பெஷல். இன்னும் என்ன யோசனை? பேக் பண்ணிட்டு கிளம்ப வேண்டியதுதானே!

### புளியோதரை

வழக்கமாக நாம் வீட்டில் செய்யும் புளியோதரையைவிட சுவை தூக்கலாகவும், கிட்டத்தட்ட இரண்டு நாட்களுக்கு மேல் கெடாமலும் இருக்கும்.

**தேவையான பொருட்கள் :**

அரிசி–அரைகிலோ, புளி–பெரிய எலுமிச்சை அளவு, எண்ணெய்–1 கரண்டி, உப்பு தேவையான அளவு.

தாளிக்க : கடலை பருப்பு–அரை தேக்கரண்டி, வேர்க்கடலை–50 கிராம், காய்ந்த மிளகாய்–5, கறிவேப்பிலை–1 கொத்து, கடுகு–அரை தேக்கரண்டி, பெருங்காயம்–அரை தேக்கரண்டி, மஞ்சள் தூள்–அரை தே.கரண்டி

அரைக்க : கடுகு–அரை தேக்கரண்டி, சீரகம்–அரை தே.கரண்டி, வெந்தயம்–5.

செய்முறை : அரிசியை உதிரியாக வடித்துக் கொள்ளவும், புளியை அரைடம்ளம் வெது வெதுப்பான நீரில் கரைத்துக் கொள்ளுங்கள். அரைக்க வேண்டிய பொருட்களை பொன் நிறமாக வறுத்து அரைத்துக் கொள்ளுங்கள். அகன்ற கடாயில் தாளித்து, கரைத்த புளியை வடிகட்டி சேர்த்து, தேவையான அளவு உப்பு சேர்த்து கொதிக்கவிடவும்.

புளிக் கரைசல் நன்றாக சுண்டிய வந்த பின்பு, அடுப்பிலிருந்து இறக்கி சாதம் மற்றும் அரைத்த பொடி சேர்த்துக் கிளறுங்கள். கலக்கலான புளியோதரை தயார். இதனை உருளை கிழங்கு சிப்ஸ் மற்றும் அத்திப்பழ அரவையுடன் சாப்பிடலாம். வெளியூர் பயணங் களின்போது சாப்பிட ஏற்றது.





கழுநீர் ஆம்பல், குவளை, தாமரை நீர்ப்பூக்கள் தாழையின் இதழ்கள், சண்பகக்காட்டில் உள்ள மலர்கள் முதலியவற்றை வண்டுகள் தேடிச்சென்று வாசத்தையும் மலர்களின் மகரந்தத்தையும் உண்ணுமாம். ஆயினும் அதில் திருப்தியடையாமல் அழகிய பருவ மங்கையரின் கூந்தலில் இருந்து வரும் இனிமையான மனத்திற்கு அவர்களைத் தேடி சாளரத் தென்றல் வழியாக என இலக்கியத்தில் சுவைபட வரும் வர்ணனைகளை நிகழ்ச்சிகளை எல்லாம் விரிவாய் விளக்கி அவளுக்கு பாடம் கற்பிப்பதில் சுவாரஸ்யத்தை கூட்டினான் தேவேந்திரன்.

நிர்மலா தான் கேட்டறியாத சங்க கால மன்னர்கள், மகளிர் பற்றிய வாழ்க்கை முறைகளை ஆர்வத்தோடு கேட்க ஆரம்பித்தாள்.

அப்படித்தான் ஒரு நாள் தேவேந்திரன் குறவஞ்சியில் வரும் காதல் பற்றிய அக்கால மகளிரின் நிலையை விளக்கினான்.

தலைவன் தலைவி இருவருக்கும் மனமொத்த காதல் ஏற்படுகிறது. பொருள் சேர்க்கும் பொருட்டு தலைவியைப் பிரிந்து செல்கிறான் தலைவன். வேனிற் காலத்தில் தவறாது வந்து விடுவேன் என உறுதிமொழி கொடுத்துச் செல்கிறான்.

இக்காட்சியை நிர்மலாவுக்கு விவரித்து அக்கால காதல் பிரிவனை பற்றிய விளக்கியவன் அத்தோடு நில்லாமல் வாசல் புறம் கை காட்டி அங்கே பார் நிஜத்திலும் உன் தலைவன் இதோ இதோ வந்து கொண்டிருக்கிறான் என கேலி செய்ய துணுக்குற்ற அறையின் வாசல் பக்கம் பார்த்தாள் நிர்மலா.

அங்கு சிரித்தபடி கிரிதரன் வந்து கொண்டிருந்தான்.

கிரிதரனைப் பார்த்ததைவிட தேவேந்திரன் அவனை தலைவன் வருகிறான் என வர்ணித்தது கண்டுதான் திடுக்கிட்டுப் போய் விட்டாள் நிர்மலா.

"என்ன சொன்னீர்கள்? கிரிதரா தலைவன்?" என டக்கென வந்துவிட்ட வார்த்தைகளை கேட்டும் விட்டான்.

தேவேந்திரனோ தன் சிரிப்பை கொஞ்சமும் விடாமல் "தலைவி நீ என்றால் தலைவனாக கிரிதரன் தானே இருப்பான். அதனால்தான் அப்படிச் சொன்னேன்.!" என இயல்பாக சொல்லிவிட்டு நுழைந்து கொண்டிருந்த கிரிதரன் பக்கம் சிரித்தபடி போனான்.

நிர்மலா சட்டென முகம் சுறுத்து எரிச்சலாகிப் போனதை அவன் தேவேந்திரன் உற்று கவனிக்கவும் செய்தான்.

## 9



அன்று ஞாயிற்றுக்கிழமை.

ஓரே போர்தான் இன்று டி.வி.யை விட்டால் வேறு போக்கிடம் கிடையாதே என்ற சலிப்புடன் நிர்மலா இருக்கும் போதுதான் உதயா தேடி வந்து ஷாப்பிங்கிற்கு அழைத்தாள்.

அப்படி என்ன ஷாப்பிங்கில் வாங்க வேண்டும் உதயா?

நிர்மலா கேட்டதற்கு கைகளை நீட்டி அபிநயம் பிடித்தாள்.

ஏன் சின்ன கைக்குட்டை வாங்குவது கூட ஷாப்பிங்தான் ஏதாவது காம்ப்ளெக்ஸ்போவோம்.லிப்ட்டில் நாலு கடை ஏறி இறங்குவோம். பாப்கார்ன் ஐஸ்க்ரீம் ஜீஸ் வகையறாக்கள் என ஒரு வெட்டு வெட்டுவோம் நேரமும் போய்விடும் திரும்பவும் செய்து விடலாம்.

அவள் சொல்வதை ரசித்துக் கேட்ட நிர்மலா பதிலுக்கு சம்மதமாய் தலையாட்டினாள்.

காலை பத்து மணிக்கு

உதயா,கௌரி, நிர்மலா மூன்று பேரும் சுறுசுறுப்பாய் கிளம்பி விட்டார்கள். ரொம்ப நாள் உடுத்தாமல் வைத்திருந்த ஷிபான் சேலை ஒன்றை உடுத்தியிருந்தாள்.

மயில தோகை வண்ண நிறத்தில் உடம்பை ஒட்டினாற் போல் இருக்கும் அழகான பூக்கள் விரிந்த நிலையில் சிதறல்களாய் இருப்பது சேலைக்கு மெருகூட்டும்.

அதைக் கட்டிக் கொண்டு நளினமாய் வந்து நிற்க உதயா ஹாண்ட் பேக்கை தூக்கிக் கொண்டு வந்தவள் வாவ் தோகை விரிக்காத மயில் ஒன்று இங்கு நிற்கிறதே யாராவது பிடித்துக் கொண்டு போய் விடப் போகிறார்கள் எனப் புகழ் சத்தம் கேட்டு கௌரியும் வந்துவிட்டாள்.

அவளும் வியந்தாள்.

நிர்மலா மயில்தான்! ஆனால் அழகு மயில் என்று சொல்! சொன்னாலும்! சொல்லாவிட்டாலும் நிர்மலா கொள்ளை அழகுதான்!. என் கண்ணே பட்டுவிடும் போல் தெரிகிறதே! என்றபடி பெரிய மனுஷி போல்கைகளால் அவள் முகம் சுற்றி நெட்டி முறித்தாள்.

"ச்சு....சும்மா.. இருங்கப்பா.. நீங்கள் வைக்கும் ஐஸ்ஸில் ஜலதோஷமே வந்துவிடும்.. என போலியாய் விலகுவதுபோல் விலகி கைதட்டி சிரித்தாள் நிர்மலா.

மற்ற இருவரும் சுடிதாரில் இருந்ததாலோ என்னவோ அவர்களை விட சேலையில் இருந்த நிர்மலாவின் அழகு தூக்கியடிக்கத்தான் செய்தது.



உதயா மறுபடியும் நிர்மலாவை உற்றுப் பார்த்துவிட்டு கண்களால் கௌரிக்கு எதையோ ஜாடை செய்வதை நிர்மலா கவனித்து விட்டாள்.

ஒரு நிமிடம் இருங்கள் என்றபடி சட்டென அவள் அகன்றபோது உள்ளுக்குள் ஏதோ உறுத்தியது நிர்மலாவுக்கு

உதயா ஏதேதோ வெட்டியயாகப் பேசி நேரம் கடத்திக் கொண்டிருக்க..ஓரளவு புரிந்தும் விட்டது.

சிறிது நேரத்தில் கௌரி எதையோ மறந்து விட்டதை எடுத்து வந்தவள் போல் திரும்பினாள். அவள் வந்த சில நிமிடங்களில் தற்செயலாய் அங்கு வருவது போல் தோன்றினான் கிரிதரன்.

அவன் தயங்கிப் போட்ட நடையையும் அசடாய் வழிந்த முகத்தையும் பார்த்து திகைத்து விட்டாள்.

வேறு என்ன? உதயா கௌரியை அனுப்பி அவனை வரச் சொல்லியிருக்கிறாள்?

எதற்காக அவளுக்கு கிரிதரன் மீது ஈர்ப்பு.காதல் வருவதற்காகவா?

அதற்காக சொல்லி வைத்தாற்போல் மூவரும் கூட்டணி வைத்துக் கொண்டு இப்படியா செய்வார்கள்?

பக்கத்தில் வந்து கிரிதரன் அவள் நினைத்தது போலவே மேலும் கீழும் அவளைப் பார்த்து ரொம்பவும் ஆச்சரியம் காட்டினான்

"வாவ்! நிர்மலா இது? என்னால் நம்ப முடியவில்லை. அழகு பளீரிட தங்கத் தேர் போல தகதகத்துக் கொண்டு.."

இது கூட இவனாக பேசுகிறானா? இல்லை இதையும் உதயா சொல்லிக் கொடுத்து பேசச் சொல்லியிருக்கிறாளா? என நினைப்பு வர நிர்மலா பக்கென சிரித்துவிட்டாள்.

அவளது பார்வையும் அவன் கிரிதரனிடமிருந்து மெல்ல விலகி பின்புறம் தேடியது. தேவேந்திரன் கண்டால் இவன் வருவதை உணர்ந்து பின்னால் வருகிறானா? என ஆவலாய் பார்த்தது.

எல்லோரும் பாராட்டும் இந்த அழகுச்சேலையில் அந்த நளினமான அழகில் அவனும் பார்த்தால் நன்றாக இருக்குமே? என நினைத்தாள்.

என்ன இது அவள் நினைப்பு வீண் போகவில்லை. இதோ தேவேந்திரனே கைகளில் ஏதோ புத்தகத்தை தூக்கிக் கொண்டு முன் ஹால் படிகளேறி வந்து கொண்டிருந்தான்.

தேவேந்திரன் வருவதைப் பார்த்ததும் ஸ்விட்ச் போட்ட பல்ப்பாய் நிர்மலா முகம் பிரகாசமாகுவதை உதயா கவனித்துவிட்டாள்.

கௌரியின் முகமும் தேவேந்திரன் வருவதைப் பார்த்து சுறுத்தது.

ஆனால் கிரிதரன் திரும்பி இயல்பான புன்னகையுடன் வரவேற்றான்.

எதிர்பார்த்தது போல் கலகலவென சிரிப்புடன் தேவேந்திரன் தோன்றிவிட்டான்.

"என்ன எல்லோரும் எங்கோ கிளம்புவது போல் தெரிகிறதே..?" என்றான்.

"எல்லோரும் அல்ல.. நாங்கள் மூவர் மட்டும்தான்!" என்றாள் உதயா வெட்டும் விதமாய்.

"கிரிதர் அண்ணாவும் வருகிறார்கள்.." என்றாள் கௌரி அவசரக்குடுக்கையாய்.

கிரிதரன் இடைமறித்தான்.

"வெறும் ஷாப்பிங் என்றால் வரவில்லை எதாவது சினிமா என்றால் ஓ.கே. நானும் வருகிறேன்..."

"அதனால் என்ன? புரோகிராமை மாற்றி விட்டால் போச்சு புதுப்படம் ஒன்று ரிலீஸ் ஆகியிருக்கிறது அதற்கே போவோம்.."

கௌரி பேசியபடி மற்ற இருவரையும் பார்க்க உதயா தலையாட்டினாள் நிர்மலாவின் பார்வையோ தேவேந்திரன் பக்கம் சென்றது.

அது புரிந்ததாலோ என்னவோ உதயாவே தமிழ் ஐயா சினிமாப் படங்கள் எல்லாம் பார்க்க மாட்டார். அவருக்கு நிறைய வேலை இருக்கும். நாங்கள் கூப்பிட்டால் எல்லாம் வர மாட்டார். அப்படித்தானே ஸார்? என்றாள் கேலியாய்.

ஆனால் தேவேந்திரனோ நீங்கள் இவ்வளவு விரும்பிக் கூப்பிடும்போது வராமல் இருப்பேனா..கண்டிப்பாக வருகிறேன். என்றான் அவளை ஆச்சரியப்படுத்துப்படி.

தேவேந்திரனின் பதிலில் உதயாவின் முகமோ சுருங்க நிர்மலா முகம் சூரிய காந்தியாய் மலர்ந்தது.

தேவேந்திரன் அவள் பக்கம் திரும்பி நிதானமாய் பார்த்து விட்டுத் திரும்பியது அவளை மேலும் கூழம் ஏற்படுத்தியது. ரசித்திருப்பானா..? ஒரு வித திருப்தியை ஆனால் ஒன்றுமே சொல்லவில்லையே...என நினைத்தாள்.

ஆனால் எல்லோரும் கிளம்பி வெளிவந்து ஆட்டோ பிடித்து



ஏறுகையில் அவள் ஆட்டோவின் விளிம்புப் பகுதி ஓரமாய் உட்கார்ந்துவிட மயில் தேவதையே பார்த்து ஊர்தி அசைகையில் நீ கீழே விழுந்து விடக் கூடும் என்றான் சுத்தத் தமிழில்.

எல்லோரும் கொல்லென சிரிக்க உதயா ஐயோ தமிழ் ஐயா ரம்பத்தை எடுத்து விட்டாரே? என மறுபடியும் சிரிப்பலை பரவியது.

அதை ரம்பம் என்று கூட சொல்லக்கூடாது. கூர் உளி என்றே சொல்ல வேண்டும். திருத்தினான் தேவேந்திரன்.

சரி ஐயா அந்த கூர்உளியை அடிக்கடி எங்கள் மீது உபயோகித்து கூர்மையை தயவு செய்து சோதிக்காதீர்கள் ஐயா.

மங்கையே உன் வேண்டுகோளை தேவேந்திர மன்னர் ஏற்றுக் கொண்டார். பயம் நீங்குவாயாக தேவேந்திரன் வேண்டுமென்றே நீட்டி இறக்கிச் சொல்லி நகைக்க நகையொலி தொடர்ந்தது.

இப்படியே பேச்சும் சிரிப்புமாய் தியேட்டரை அடைந்து விட்டார்கள்.

புதுத் திரைப்படம் என்றாலும் கூட்டம் சுமாராகவே இருந்தது. கிரிதரனும் தேவேந்திரனும் உள்ளே போய் டிக்கெட் எடுத்துவர எல்லோரும் நுழைவுப்பகுதியை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

நிர்மலாவிற்கு சிறுவயதிலிருந்து பார்த்துப் பழக்கம் இல்லாததால் சினிமா பார்ப்பதில் அவ்வளவு நாட்டமும் கிடையாது. எப்போதாவது பக்கத்து வீட்டுத்தோழிகளுடன் அபூர்வமாய் சென்று விட்டு வருவது உண்டு.

அப்படி வந்தாலும் தியேட்டரை விட்டு வெளி வருகையிலே பயங்கரத் தலைவலி ஒன்றைத் தலையில் தாங்கிப் பிடித்தவாறுதான் வருவாள். வீட்டிற்கு வந்தவுடனேயே இஞ்சித்துண்டு ஒன்றை அம்மியில் அரைத்து தட்டி தலையில் தேய்த்தவாறு சிறிதுநேரம் படுத்துவிடுவாள்.

அந்த பயங்கரத் தலைவலி வந்துவிடும் என்ற நினைப்பிலே அப்படி சினிமா போகும் எண்ணத்தையே அவள் விட்டு விட்டதும் உண்டு. சொல்லப் போனால் இன்று உதயா முதலிலே சினிமா என்று சொல்லியிருந்தால் வரவில்லை என மறுத்திருப்பாள்.

ஆனால் தேவேந்திரன் வருகிறான் என்றதும் அவளது தலை தானாக சம்மதித்து ஆடியது ஏனெனில் தியேட்டரில் அவள் பார்க்க போவது சினிமாப் படத்தையா.? இல்லையே தேவேந்திரனைத்தானே.

தியேட்டரினுள் நுழைந்து மெல்லிய இருட்டில் ஸீட்டைத் தேடி எல்லோரும் அமரப் போனார்கள். முதலில் கௌரி உட்கார அவளை அடுத்து கிரிதரன் உட்கார பக்கத்தில் உதயா உட்காரப்போனாள் உட்காரப் போனவள்

சட்டென சுதாரித்து நிர்மலாவைப் பிடித்து இழுத்து அந்த ஸீட்டில் கிரிதரன் பக்கத்தில் நீ இங்கு உட்கார் என உட்கார்த்தி வைத்தாள்.

அடுத்து அவள் உட்கார்ந்து கொண்டு தேவேந்திரனை மறு சேரில் உட்காரச் சொன்னாள்.

தேவேந்திரன் தன் பக்கத்தில் உட்காரப் போவான் என நினைத்த நிர்மலா உதயா நுழைந்து சட்டென மாற்றி விட்டது எரிச்சலைக் கிளப்பியது.

அதைவிட கிரிதரன் பக்கத்தில் தான் உட்கார வேண்டும் என திட்டமிட்டு ஜோடி சேர்க்க முயல்வது ஆத்திரமாகவும் இருந்தது.

எப்படி இதைத் தடுக்க? என எண்ணியவள் படம் தொடங்கிய சிறிது நேரத்தில் வேறு ஒரு ஐடியா செய்தாள்.

ஐயோ உதயா எனக்கு மறைக்கிறது. நீ இங்கு வாயேன் என்றபடி சட்டென எழுந்து உதயாவை தன் இருக்கைக்கு மாற்றினாள். தேவேந்திரன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

படத்தை விட உதயாவும் கௌரியும் என்ன செய்வது என கையை பிசைந்தபடி தவித்ததை ரொம்பவும் ரசித்தாள் நிர்மலா.



## 10

நிர்மலா அன்றும் வழக்கம் போல் படுத்தவள் தூக்கம் வராமல்தான் புரண்டு கொண்டிருந்தாள்.

ரொம்ப நேரம் அப்படியே தூங்காமல் சிந்தனை வயப்பட்டும் படுக்கையில் கிடந்தவள் அப்படியே எரிச்சலானவளாய் எழுந்து உட்கார்ந்தாள்.

தற்செயலாய் பார்வை ஜன்னல் பக்கம் செல்ல தூரமான இடது புற ஓரமாய் இருக்கும் உதயாவின் ரூமில் லைட் எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

மணியைப் பார்த்தாள்.

இரவு மணி பத்து.

இவ்வளவு நேரம் உதயா தூங்காமல் இருக்க மாட்டாளே டாண்ணென்று ஒன்பது மணிக்கே படுத்து விடுவாளே.

யோசனை தாக்க வெளிவந்தவள் மெல்ல உதயாவின் ரூமை நோக்கி நடந்தாள்.



அவள் ரூமை நெருங்க நெருங்க உள்ளிருந்து மெல்லிய பேச்சுக்குரல்கள் எழுந்தவை காதில் விழுந்தன.

மெல்ல ஓசையில்லாமல் பக்கம் சென்று காதுகளை உன்னிப்பாக்கியபோது எல்லாமே தெள்ளத் தெளிவாய் கேட்டது.

கிரிதரன் குரல் கூடவே உதயா கௌரியின் பேச்சுக்குரல்கள்.

கிரிதரனை உட்கார வைத்து உதயாவும் கௌரியும் பேச்சை ஆரம்பித்திருக்க வேண்டும் என்பது போலவே தோன்றியது.

எத்தனை முறை சொல்லிவிட்டேன் நீ புரிந்து கொள்ளாமல் இருக்கிறாயே? உன்னை என்னதான் செய்வது?

சலிப்புடன் உதயாவின் குரல் ஒலிக்க தொடர்ந்து கிரிதரனின் பேச்சும் படபடத்து கேட்டது.

ஐயோ உதயா நீ புரியும்படி கொஞ்சம் சொல்லும்மா நான் என்னதான் செய்யவேண்டும்.

வேறு வழியில்லையா? கண்டிப்பாக செய்தாக வேண்டுா?

இம்முறை கௌரி குறுக்கிட்டாள்.

அண்ணா உதயா சொல்வது உண்மைதான் இப்போது தலைக்கு மேல் வெள்ளம் போயாயிற்று நீ உடனே தேவேந்திரனை வெளியேறும்படி செய்ய வேண்டும்.

மறுபடியும் கிரிதரன் யோசனைக்குப் போனது இரண்டு சகோதரிகளுக்கும் எரிச்சலைத் தந்திருக்கவேண்டும். உதயா குரலை உயர்த்தினாள்.

அண்ணா இதோ பார் என்றாள்.

என்ன உதயா? என்றான் கிரிதரன்.

முதலில் ஒரு விஷயத்தை எனக்கு தெளிவு படுத்து.

என்ன விஷயம் உதயா?

உண்மையிலே உனக்குநிர்மலாவைப் பிடித்திருக்கிறதா? அவளை நீ விரும்புகிறாயா?

பிடித்திருக்கிறது. விரும்புகிறேன். என்றான் கிரிதரன் அழுத்தமான குரலில். அதாவது உங்களுக்கு உண்மையிலே நிர்மலா மீது விருப்பம் இருக்கிறது. எங்களுக்காக இப்படிச் சொல்லவில்லையே?

உண்மையாக நிஜமாகத்தான் சொல்கிறேன் மேலும் நிர்மலா மீது கொஞ்சமாய் இருந்த ஈடுபாடு இப்போது அதிகரித்து நூறு சதவீதமாக

மாறிவிட்டது. மேலும் நிர்மலா இல்லாத வாழ்க்கையொன்றை என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. அந்த அளவுக்கு ஏறக்குறைய நிர்மலா மேல் பைத்தியமாகவே ஆகிவிட்டேன்.

கிரிதரன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் கேட்டுக் கொண்டிருந்த நிர்மலாவிற்கு இடி போலத்தான் இறங்கியது.

இந்த கிரிதரனை எப்படியெல்லாம் ஜென்டிலாக நினைத்திருந்தோம்? இன்று ஏதோ ரோமியோ போல் அல்லவா உளற ஆரம்பித்து விட்டான்.

அவள் திகைத்து ஸ்தம்பித்து நிற்க அதை விட கிரிதரனின் பேச்சுக்கு பதிலாய் உதயா கூறியது அவளை அதிர்ச்சியின் எல்லைக்கே கொண்டு போனது.

"அண்ணா உன் நிலைமை எனக்குப் புரிகிறது எதற்கும் கவலைப்படாதே உன்னைப் போல்தான் நாங்களும் எப்படியும் இந்த வீட்டு மருமகளாக்கிவிட வேண்டும் என குறியாய் இருக்கிறோம். எங்கள் இருவருக்கும் நிர்மலாவை ரொம்பவும் பிடித்திருக்கிறது. அந்த தேவேந்திரன் அவளை லேசாய் தட்டிச் சென்றுவிடக் கூடாது என்றே பயப்படுகிறோம். மேலும் நீ அந்த தேவேந்திரனை சாதாரணமாய் எடை போடாதே. அவன் பேச்சாலே நிர்மலாவை ஐம்பது சதவிதம் மயக்கி தான் வளைத்து விட்டான். இனியாவது நாம் சுதாரித்துக் கொள்வோம் தேவேந்திரனை விரட்டி விடுவோம்."

"நீ சொல்வது எனக்கு நன்றாகப் புரிகிறது. உதயா ஆனால் அவன் தேவேந்திரன் என்னுடைய நண்பன். அவனை நான் அவ்வளவு எளிதாய் முகத்திலடித்தாற்போல் சொல்லி வெளியேற்ற மடியாது அவன் நம்பும்படி ஏதாவது வலுவான காரணத்தைச் சொல்ல வேண்டும்."

கௌரி அவசரக் குடுக்கையாய் மறுபடியும் குறுக்கிடுவது தெரிந்தது.

"இதிலெல்லாம் கொஞ்சமம் யோசிக்கக்கூடாது அண்ணா சும்மாவாக முகத்திலடித்தாற்போல் சொல்லியாவத வெளியேற்றிவிட வேண்டும்..."

உதயா மீண்டும் பேசினாள்.

இல்லை கௌரி அந்த தேவேந்திரன் சரியான மூளைக்காரன். அவனை அண்ணா சொல்வது போல் சந்தேகம் வராதபடி பக்குவமாய்தான் டீல் செய்ய வேண்டும். நாம் கோபப்பட்டாலோ இல்லை ஆத்திரப்பட்டு நடந்து கொண்டாலோ அதை அப்படியே போய் நிர்மலாவிடம் சொல்லி நம் மேல் வெறுப்பு வரும்படி செய்து விடுவான்.



"நீ சொல்வது சரிதான் அப்படியானால் ஏதாவது திட்டம் போடுவோம் திட்டம் போட்டு அந்த தேவேந்திரனை வெளியேற்றுவோம்."

"என்ன திட்டம்?" என்றான் கிரிதரன்.

உதயா கொஞ்ச நேர மௌனத்திற்குப் பிறகு பேசுவது கேட்டது.

"ஓரே ஒரு திட்டம் தான்! எப்பபடியாவது நிர்மலாவுக்கு பிடிக்காததை நிர்மலா எரிச்சலூட்டும் ஒன்றை அவனைச் செய்ய வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் நிர்மலா அவனை வெறுத்து விடுவாள். அவனும் இங்கு இருக்கப் பிடிக்காமல் ஓடி விடுவான்."

"அதற்கு.. நாம்... என்ன செய்ய வேண்டும்?'

"தெரியவில்லை.... யோசிப்போம்....!'

அதன்பின் அங்கு நேரம் மௌனம் நிலவ அத்துடன் அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டு யோசிப்பது தெரிந்தது.

அதற்கு மேல் அங்கு நின்று பேசுவதை கேட்பது சரியல்ல என்று நிர்மலாவுக்குத் தோன்றியதால் மெல்ல திரும்பி வந்தது போலவே ஓசையில்லாமல் நடந்தவள்.

அப்படி நடந்தவள் இரண்டு எட்டு எடுத்து வைத்ததுமே அப்படியே திகைத்து நின்று விட்டாள்.

எதிரே குரோட்டன்ஸ் செடியின் ஓரமாய் தேவேந்திரன் அவளைப் போலவே அவனும் நின்று அவர்கள் பேசுவதை ஒட்டு கேட்டுக் கொண்டிருந்தபடி.



## 11

தேவேந்திரன் முதலில் நிர்மலாவை கவனிக்கவில்லை. அவன் அறையின் எதிர்புறமாய் நின்று கேட்டுக் கொண்டிருந்ததால் மறுபுறம் நின்ற நிர்மலா கவனிக்கவில்லை. அவள் நடந்து வெளி வந்தபோதுதான் அவளும் தன்னைப் போல நின்று கேட்டிருக்கிறாள் என்பதை புரிந்து கொண்டான்.

இருவர் கண்களும் அதிர்ச்சியோடு ஒரு முறை சந்தித்துவிட்டு விலகின. தேவேந்திரன் சைகையாலேயே அவளை முன்னால் நடக்கும்படி கூறி பின்னால் தொடரந்தான்.

அங்கிருந்து தள்ளி தனது அறைப் பக்கம் வந்ததும் நிர்மலா நின்றாள். தேவேந்திரன் திரும்பிப் பார்த்தபடியே நடந்து வந்தவன் நீளமாய் மூச்சிழுத்தபடி நிர்மலாவை பார்த்தான்.

நிர்மலாவுக்கு அவர்கள் பேசியதை தேவேந்திரன் கேட்டிருப்பானா? என்ற சந்தேகம் இருந்தது.

நீங்கள் எல்லாவற்றையும் கேட்டு விட்டீர்களா? என்றாள் ஆர்வக் குரலில்.

தேவேந்திரன் ஒருவித சோகத்துடன் தலையசைத்தான்.

கேட்டுவிட்டேன் ஆனால் ரொம்பவும் சங்கடமாக இருக்கிறது எனக்குப் பிரியமானவர்களே என்னைப் பற்றி தவறாக நினைக்கிறார்கள்.

அவன் சொல்வது அவளை குழப்பத்தான் செய்தது தவறாக நினைக்கிறார்களா? என்ன சொல்கிறீர்கள்.

ஆம் நிர்மலா அவர்களது விருப்பத்திற்கு மாறாக நான் நடந்து கொள்வேன் என்று எதிர்பார்க்கிறார்கள் அது தவறுதானே?அவர்களது விருப்பமா? எதை நீங்கள் சொல்ல வருகிறீர்கள்?

குழப்பம் நீங்காமல் கேட்டபடி மேலும் அவன் சொல்லப் போவதை ஒருவித அச்சத்துடனே பார்த்தாள் நிர்மலா.

வேறென்ன காதல் வி□யம்தான்..என்றான் மறுபடியும் அவன் மொட்டையாக.

நிர்மலாவுக்கு எரிச்சலாகத் தான் இருந்தது தெளிவாய் ஒரு வரியில் சொல்வதை விட்டு விட்டு இப்படிச் சுற்றிப் பேசுகிறானே என நினைத்தாள்.

காதல் வி□யமா? என்றாள் அவளும் பதிலுக்கு எதுவும் தெரியாதது போல்.

தேவேந்திரன் பதில் சொல்லாமல் அவள் பக்கம் வந்தவன் ஒரு நிமிடம் அவளது கண்களை உற்று நேருக்கு நேர் பார்த்தான்.

பின் பார்வையை விலக்கி கொண்டபடி கைகளைக் கட்டிக் கொண்டவன் நிர்மலா எல்லாம் உனக்கும் தெரிந்ததுதான்.ஆனால் இப்போது எதையும் வெளிப்படையாய்பேசமுடியாத சூழ்நிலை இந்தச்சூழ்நிலையில் ஒரே ஒரு வி□யத்தைப் பற்றித்தான் நான் சிந்திக்க முடியும் பேசமுடியும்..

நிர்மலாவுக்கு அவன் பேசுவது புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாததுபோலவும் இருந்தது. இருந்தும் என்ன வி□யம் எனக் கேட்டாள்.

அதாவது கிரிதரனுக்கோ அவனது ப்ரியமான குடும்பத்தினருக்கோ எவ்வகையிலும் அவர்கள் மனம் புண்படும்படி நான் நடந்து கொள்ளக்கூடாது என நினைக்கிறேன். என்னால் அவர்களது குடும்பத்தில் குழப்பமோ பிரச்சினையோ ஏற்பட்டு விடக்

கூடாது எனவும் நான் விரும்புகிறேன்.



அவன் சொல்லச் சொல்ல அவளுள் திகில் பரவத்தான் செய்தது. அவன் எதைச் சொல்ல வருகிறான் என்பதும் பயமாய் புரிய ஆரம்பித்தது.

அதற்காக எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் நான் சில முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன் நிர்மலா.

அழுத்தமாய் அவன் சொன்னபோதுமுடிவுகளா..? என்றாள் அவள்குரல் நடுங்க.

அதற்கு வேகமாய் தலையசைத்த தேவேந்திரன் அவளை மீண்டுமொருமுறை ஆழமாய்ப் பார்த்து விட்டு திரும்பி நடந்தான் அவன்.



## 12

மறுநாள் வழக்கம் போல் விடிந்து காலை கிரிதரனின் கன்ஸல்டன்ஸி வேலைக்குக் கிளம்பிச் சென்று விட்டான்.

நிர்மலா.

மதியம் வந்தபோது தான் அதிர்ச்சியான வி□யம் அவளது காதுகளில் விழுந்தது. தேவேந்திரனுக்குஏதோ வந்ததாகவும் அதனால் அவசர வேலையொன்று இருப்பதாக எல்லோரிடமும் சொல்லிவிட்டு சொந்த ஊரான திருச்சிக்கு கிளம்பிச் சென்று விட்டானாம்.

அதுவும் எப்படி? எல்லோரிடமும் வி□யத்தைச் சொல்லியிருக்கிறான்.

அவளைத் தவிர

வேண்டுமென்றே அவளிடம் சொல்வதை தவிர்த்து அவள் இல்லாத நேரமாய் பார்த்துக் கிளம்பி இருக்கிறான்.

நேற்று நாளை உனக்குப் புரியும் என்று அவன் சொன்னதன் அர்த்தம் இதுதானா?

இப்படி ஊரை விட்டு கிளம்புவதுதான் அவன் எடுத்திருக்கும் தீர்மானமான வி□ேமான முடிவா?

ஒரு கணம் அவன் ஊருக்குச் சென்று

விட்டதை தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் சென்று விட்டதை நம்ப முடியாதவளாய் அவனது அறைக்கே சென்று பார்த்தாள்.

அறைக்கதவு திறந்து கிடக்க உள்ளே துடைத்து விட்டாற் போல் பளிச்சென்று இருந்தது.

மூட்டை முடிச்சுகளுடன் ஒன்று விடாமல் எல்லா வற்றையும் எடுத்துக்கொண்டு போய் விட்டிருந்தான் தேவேந்திரன்.

இனி திரும்பி வரம் எண்ணம் இல்லையா அல்லது இனி அவன் திரும்பி இங்கு வரப் போவதே இல்லையா?

நிர்மலாவிற்கு ஒரேஆச்சரியம்.

தேவேந்திரன் போய்விட்டதில்இருந்து அவள்தான் அவனைக் காணாமல் தேடினாள். பார்க்காமல் தவித்தாள். அவன் பிரிவைத் தாங்க முடியாமல் துடித்தாள்.

மற்ற யாரும் அவனுக்காக எள்ளளவும் கவலைப்பட்டதாகக் காணோம்.

அவர்கள் பாட்டுக்கு வழக்கம் போல் நடமாடினர்.

உதயாவும் கௌரியம் தேவேந்திரன் ஊருக்குப் போய் விட்டாரா? பாவம் அவருக்க என்ன அவசர வேலையோ? என பெரிதாய் சூள் கொட்டி வருத்தப்படுவது போல் முகத்தையும் வைத்துக் கொண்டனர்.

ஆஹா நல்ல நடிப்பு என உள்ளுக்குள் பற்களைக் கடித்தாள் நிர்மலா.

என்னென்னவோ பிளான் போட்டு தேவேந்திரனை விரட்டாத குறையாய் அனுப்பி விட்டு ஒன்றும் தெரியாததுபோல் பேசுகிறார்களே என வியக்கவும் செய்தனர்.

கிரிதரனிடம் கூட நிர்மலா கேட்கத்தான் செய்தாள்.

அவனும் கிளிப்பிள்ளையாய் அதே பதிலையே சொன்னாள். தேவேந்திரனுக்கு அவசரமாய் ஏதோ சொந்த வேலை அதான் சென்று விட்டான். என்றான் மொட்டையாக.

அப்படி என்ன சொந்த வேலை உங்களிடம் கூட சொல்லவில்லையா?

சொல்லவில்லை என கைகள் விரித்தான் அவன்

நீங்கள் அவரைத் தடுக்கவில்லையா என்றாள் பிரயாசையாய்.

சொல்லிப்பார்த்தேன் கேட்கவில்லை என்றான் அவன் அதற்கும் விட்டேற்றியாய்.அவர்

ஆராய்ச்சிப் படிப்பு வேறு இதனால் தடைபட்டு விடுமே?

நிர்மலா கேட்டதற்கு கிரிதரன் சிரித்து அவளுள் எரிச்சலைக்கிளப்பினான்.

ஆராய்ச்சி படிப்பை பற்றி தேவேந்திரனே கவலைப்படவில்லை. நான் ஏன் கவலைப்பட வேண்டும். அதை இந்த வருடம் முடியவில்லை என்றால் அடுத்த வருடம் தொடருவான்.



கிரிதரன் அசால்ட்டாய் ஒருவித அலட்சியத்துடன் தான் தேவேந்திரன்பற்றி பேசுவதாய் நிர்மலாவிற்கு பட்டது.

என்ன இருந்தாலும் இவனும் உதயா, கௌரியுடன் சேர்ந்து கொண்டு நண்பன் என்றும் பாராமல் தேவேந்திரனை விரட்டத் துணிந்தவன் தானே?

சொல்லப் போனால் இவனுக்கும் உதயா கௌரிக்கு எல்லாம் தேவேந்திரன் வீட்டை விட்டுச் சென்று விட்டது பெரும் நிம்மதிதான் மனதிற்குள் குதூகலம் தான்.அவர்கள் திட்டம் போடாமலே தேவேந்திரனை விரட்டி விட்டார்களே.இனி என்ன செய்ய போகிறார்கள்.

தேவேந்திரன் இல்லாததால் அவன் நினைப்பு வராது மறந்து விடுவேன் என்று நினைத்தார்களா?

கிரிதரனைக் கொண்டு அவனுடன் மேலும் பழகச் செய்து மயக்க பார்ப்பார்களோ?

நிர்மலா இப்படி விளையாட்டாய் நினைத்தாலும் நிஜமாகவே அப்படித்தான் நடந்தது. கிரிதரன் மறுநாளே,தமிழ்ப் பாடங்கள் எனக்கும் தெரியும் நானே மதியம் உனக்கு பாடம் எடுக்கிறேன். என தேவேந்திரன் விட்ட தமிழ்ப்பாடங்களை அவளுக்கு கிளாஸ் எடுக்க ஆரம்பித்து விட்டான்.

என்னடா இது வம்பு என நிர்மலா துடிப்பாய் நினைத்தவள் ஏதேதோ காரணங்களைச் சொல்லி தவிர்க்கப் பார்த்தாள் ஆனால் கௌரி தினமும் வந்த அவளை இழுக்காத குறையாய் கிளாஸிக்கு அழைத்துச் சென்றாள்.

நீ வேண்டுமானால் பாரன் கிரிதரன் அண்ணா தமிழில் ரொம்பவும் கெட்டிக்காரர். தேவேந்திரனை விட வி☐யமறிந்தவர். நன்றாக பாடம் நடத்துவார்... என்றபோது நிர்மலா அவளை முறைக்கவே செய்தாள்.

தேவேந்திரன் தமிழில் எம்.ஏ. முடித்தவர் அவரை விடவா? என வேண்டுமென்றே சண்டைக்குப் போகாத குறையாய் கேட்டாள்.

கௌரி அதற்கும் விளக்கம் கொடுத்தாள்.

படிப்பு வேண்டுமானால் தேவேந்திரன் படித்திருக்கலாம். ஆனால் மனதில் புரிகிற மாதிரி பாடங்களை விளக்குவதில் கிரிதரன் கெட்டிக்காரர் என்றாள் கிரிதரனை விட்டுக் கொடுக்காமல்.

இப்படி கௌரி கிரதரனை தலையில் வைத்து கூத்தாடாத குறையாய் உயர்த்தி உயர்த்திப் பேசுவது நிர்மலாவை ரொம்பவும் எரிச்சல் படுத்தியது.

இப்படி ஜம்பம் அடிக்கும் அவளுக்கு நன்றாக ஒரு குட்டி வைத்து அவளையும் எரிச்சல் படுத்த நினைத்தாள் நிர்மலா.

கிரிதரனை பற்றி இவ்வளவு பேசுகிறாயா கௌரி என்றாவது அவர் சிரிப்பதை பார்த்திருக்கிறாயா? லேசாக பார்த்து ஒரு சின்னப் புன்னகை புரியவே காசு கேட்பார் போல் அல்லவா அவர் குணம் இருக்கிறது.

நிர்மலா கேள்வியைக் கண்டு புருவம் உயர்த்தியபடி நெளியத்தான் செய்தாள் கௌரி.

அது அதுவேறொன்றுமில்லை அவரது முகவாகு அப்படி. அதை நாம் தவறாக எண்ணக் கூடாது ஆனால் நீ பார்த்ததில்லை. வேண்டியபோது கிரிதரன் சிரிக்கத்தான் செய்வார்.

அவள் இன்னமும் விட்டுக் கொடுக்காமல் கிரிதரனை பேசுவதைக் கண்டு நிர்மலாவுக்கு சிரிப்பே வந்துவிட்டது.

ஆமாம் ஆமாம் வேண்டியபோது கையினால் சிச்சம் காட்டினால் சிரிக்கத்தான் செய்வார். அப்படித்தானே?

நிர்மலா சொல்லியபோது தான் அவள் தன்னை கேலி செய்கிறாள் என்பதை உணர்ந்தாள் கௌரி.

அட நிர்மலா நீயா இப்படியெல்லாம் பேசுகிறாய்? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறதே என்றாள் நம்பமுடியாமல்.

உள்ளபடி கௌரி சொன்னது போல் நிர்மலா இப்படியெல்லாம் பேசுவது வியப்பான விஷயதே பொதுவாய் இப்படி பதிலுக்கு பதில் கொடுத்து கோபப்படுவதோ கேலி செய்வதோ அவளது சுபாவம் அல்லவே.

ஆனால் கேலி இப்போது தேவேந்திரனை கௌரி வேண்டும் என்றே மட்டம் தட்டி பேசுவதைக் கேட்கும் போது அவளையறியாமல் பொசுக்கென அந்த கோபமும் எரிச்சலும் வருவதை உணர்ந்தாள்.



## 13

வழக்கம் போல் துணிகளை உலர்த்த மாடிப்படியேறப் போனவள் இதுதான் சமயம் நிர்மலாவை சம்மதிக்க வைத்து விடலாம் என்ற குரல் கேட்டு அப்படியே நின்று விட்டாள்.

மெல்ல சுவர் விளிம்புப் பக்கம் பார்த்தாள்.

கிணற்றடி சுவர் பக்கமாய் அந்த மூவரின் கூட்டணி.

உதயா கௌரி கிரிதரன்.

அதே போல் கிசுகிசுப்பேச்சு



இப்படி ஒவ்வொரு முறையும் ஏதோ உளவாளி போல் பேச்சுக்களை ஒட்டுக் கேட்பது தவறு அது அநாகரீக மான செயல் என மனம் உறுத்த ஒரு நிமிடம் தயங்கி நின்றாள்.

மறுகணமே எதிரான எண்ணம் ஒன்று கிளம்பி ஓடியது.

ஒட்டுக் கேட்பது தவறு என்பது போல் அவர்கள் இப்படிக் கிசுகிசு பேச்சு பேசுவதும் தவறுதானே? ஒருவரைபழி வாங்குவது போல் ரகசியமாய் திட்டம் தீட்டுவதும் அநாகரீகமான செயல்தானே?

அவர்கள் இப்படி தரம் தாழ்ந்து செய்யும்போது அதை முறியடிக்க இப்படி ஒட்டுக் கேட்டு விஷயத்தை அறிவதில் தப்பில்லை என மனது தைரியம் பெற மெல்ல ஓசைப்படாமல் அதே இடத்தில் நின்று காதுகளைத் தீட்டினாள்.

வழக்கம் போல் உதயாவின் குரல்தான்கணிரென முதலில் ஒலித்தது.

இதுதான் சமயம் நிர்மலாவை சம்மதிக்க வைத்து விடலாம். புரிந்து கொள்ளுங்கள் என்ற சொல்லிக் கொண்டிருந்தாள் உதயா.

எதை வைத்து இவ்வளவு உறுதியாய்ச் சொல்கிறாய்? கேட்டவள் கௌரி.

ஒன்றை கவனித்தாயா? இப்போதுதான் நிர்மலா கன்ஸல்டன்ஸி, மதியம் தமிழ் வகுப்பு என பல மணி நேரத்தை கிரிதருடனே கழிக்கிறாள். அப்படிக் கழிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டு இருக்கிறது. ஆக இதுதான் அவள் மனதை மாற்ற சரியான சமயம்.

ஆமாம் ஆமாம் பாதி நேரம் நிர்மலா என்னுடன் தான் இருக்கிறாள். நானும் அவளை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். சட்டென கிரிதரன் குறுக்கிட்டு சொல்ல உடனடி பதிலடி கொடுத்தாள் உதயா.

அட நீ மட்டும் பார்த்தால் போதாது அவளையும் உன்னைப் பார்க்கும்படி வைக்க வேண்டும்.

அது எப்படி?

மக்கு மாதிரி கேட்காதே ஒரு பெண்ணைக் கவர சுவாரஸ்யமாய் நகைச்சுவையாய்பேச வேண்டும். அப்படிப் பேசினால் எப்பேர்ப்பட்ட பெண்ணும் உன்னைப் பார்த்து இளித்துதான் ஆக வேண்டும் புரிகிறதா?

புரிகிறது..புரிகிறது..

என்ன புரிகிறது?

முதலில் நிர்மலாவிடம் நகைச்சுவையாய் பேசி இளிக்க வைக்கிறேன்.

தலையிலடித்துக் கொண்டு கௌரி பேசுவது கேட்டது.

அண்ணா நீ பார்க்கத்தான் வாட்ட சாட்டமாய் இருக்கிறாய். ஆனால் சரியான குமுட்டை உனக்கு காதல் பற்றி சொல்லிக் கொடுக்க இனி புதுசாய் காதல் கலைக் கல்லூரிஒன்றுதான் ஆரம்பிக்க வேண்டும்.

அப்படியா? என்றான் அவன் அதற்கும்.

உதயா கோபப்படுவது தெரிந்தது.

என்ன அப்படியா என்கிறாய்? முதலில் இந்த டிதீட' லைட் மாதிரி பேசுவதை நிறுத்து. இனி நீ சந்திக்கும் ஒவ்வொரு நொடியும் முக்கியமானது. இது ஒரு நல்லல சந்தர்ப்பம். தேவேந்திரன் இடைஞ்சல் இல்லாமல் நிர்மலா தனியாகத்தான் இருக்கிறாள். நீ என்ன செய்வாயோ தெரியாது அவளிடம் நல்ல பெயர் மட்டும் எடுத்து விடு. மற்ற விஷயங்களுக்கு நான் ஒரு பெரிய திட்டமும் வைத்திருக்கிறேன்.

திட்டமா? என்னிடம் சொல்லவே இல்லையே?

சொல்கிறேன். கௌரி நிர்மலா விஷயத்தில் நாம் மட்டும் முயற்சி செய்தால் போதாது பெரியவர்களைவிட்டு வேறு விதமான முயற்சியையும் ஆரம்பித்து விட வேண்டும்.

பெரியவர்களை வைத்தா?

ஆம் நம் வீட்டுப் பெரியவர்கள். அதாவது நம் அம்மா பெரியம்மா இவர்களை வைத்து நிர்மலாவின் தந்தையிடம் கிரிதரனுக்கு நிர்மலாவை கட்டிக் கொடுப்பது பற்றிய பேச்சை ஆரம்பித்து விடுவோம். அவர் சதாசிவம் மாமா நல்லவர். பெரியம்மா அம்மாவும் சொன்னால் தட்டவே மாட்டார். உடனே சம்மதித்தது விடுவார். அவர் சம்மதித்தது விட்டால் போதுமே? நிர்மலாவுக்கு வேறு வழி இருக்காதுஇ தேவேந்திரன் வேறு இங்கு இல்லை. அதனால் அவள் சாக்கு போக்கு சொல்லாமல் சம்மதம் சொல்லிதான் ஆக வேண்டும்.

உதயா முடிக்கவில்லை.

சூப்பர்பினான் அருமையனா திட்டம்.

கௌரியும் கிரதானும் குதிக்காத குறையாய் உற்சாகக் குரலில் சொல்வது கேட்டது.

உதயா உன் திட்டம் பிரமாதம் ஆனாலும் நீ இவ்வளவு புத்திசாலியாய் இருப்பாய் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ரியலி நீ ஆர் வெரி க்திட்.கிரிதரன் உதயாவுக்கு புகழாரம் செய்ய அதையும் வெட்டினாள் அவள்.



இந்தப் புகழ் பாடும் பேச்சை ஐஸ் வைக்கிற பேச்சை என்னிடம் காட்டாதே நிர்மலாவிடம் போய் காட்டு அவள்தான் உன் பேச்சில் மயங்கி விழ வேண்டும்.

புரிகிறது உதயா கண்டிப்பபாய். செய்கிறேன்.

கிரிதரன் சொன்னதைக் கேட்டு மிகவும் உற்சாகமானவர்களாய் உதயாவும் கௌரியும் கைதட்ட ஆரம்பித்து விட்டனர்.

நடந்த பேச்சுக்கள் முழுவதையும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த நிர்மலா அடப் பாவிகளா என்பது போல வாயில் கைவைத்தபடி அதிர்ச்சியானாள்.



## 14

மறுநாள் விடிந்ததும் இதே சிந்தனையாய்த்தான் அலைந்தாள் நிர்மலா.

எப்படியாவது கிரிதரனிடம் இருந்து அந்த தேவேந்திரனின் முகவரியை தொலைபேசிஎன்னை வாங்கிவிட வேண்டும் என்று.

என்ன செய்ய? என தீவிரமாய் யோசித்தாள்.

கிரிதரன் இனி ஒரு போதும் தர மாட்டான்.நேர்வழியில் கேட்டு பிரயோஜமில்லை.

குறுக்கு வழியில்தான் வாங்க வேண்டும் அது எப்படி?

அவள் யோசிக்க மின்னலாய் அந்த வழி புலப்பட்டது. கிரிதரன் இது போன்ற முகவரிகளை, தொலைபேசி எண்களை ஒரு டயரியில் தான் எழுதி வைப்பது வழக்கம்.

அந்த டயரி மட்டும் கிடைத்து விட்டால் போதுமே.

அந்த மஞ்சள் நிற டைரியை அவன் எப்போதும் வீட்டிலிருக்கும் அவனது அறையில் உள்ள பீரோவில் பத்திரப்படுத்தி வைப்பதை நிர்மலா பலமுறை கவனித்திருக்கிறாள்.

அதை மட்டும் எடுத்து விட்டால் போதும்.

எல்லா வேலையும் சுலபமாகிவிடும்.

யோசித்த நிர்மலா மதியம் பாட்மிட்டன் விளையாட என கிரிதரன் உதயா கௌரி மூவரும் பக்கத்து பள்ளிக்கூட மைதானத்திற்கு கிளம்பிச் செல்வதை அறிந்திருக்கிறாள்.

ஆகையால் அதுவே கிரிதரனின் ரூமைக் குடைய சரியான நேரம் என முடிவெடுத்தாள்.

தனது திட்டத்தை மேலும் தாமதிக்காமல் அன்று மாலையே மூவரும் பாட்மிட்டன் விளையாடச் சென்றதும் கிரிதரனின் அறையை நோக்கிக் கிளம்பினாள்.

நல்லவேளையாய் ரூமில் யாரும் இல்லை. அவள் எதிர்பார்த்த விதமாய் ரூம் கதவு லாக் செய்யப்படாமல் திறந்தே இருக்க..மெல்ல பூனையாய் நழுவி உள்ளே நுழைந்தாள்.

ஐந்து நிமிடம் கூட ஆகவில்லை.

புக் ஷல்ப்பில் புத்தகங்களுக்கு இடையே இருந்த மஞ்சள் நிற டயரியை கண்டு பிடித்து விட்டாள்.

அதை ஆவலாய் எடுத்துப் பிரித்தாள்.

உள்ளே அவள் எதிர்பார்த்த மாதிரியே தேவேந்திரனின் முகவரி தொலைபேசி எண்கள்.

கண்கள் பிரகாசிக்க டயரியை மூடிக் கொண்டு விறுவிறுவென வெளி வ்நதாள்.

இன்னும் யாரும் வரவில்லை யாரும் பார்க்கவில்லை.

வந்தது போலவே அமைதியாய் நழுவினாள்.

தன் ரூம் பக்கம் போனாள்.

கதவைச் சாத்திக் கொண்டு டயரியைப் பார்த்தவள். நெம்பரைப் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

அன்று இரவு ஒன்பது மணி வாக்கில் ஊரடங்கிய வேளையில் மெல்ல தொலைபேசியை எடுத்து நெம்பரைச் சுழற்றினாள்.

கொஞ்ச நேரத்தில் தொலைபேசி உயிர் பெற்றது.

பேசியது தேவேந்திரனே தான் என்ன ஒரு ஆச்சரியம் என வியந்தே போய் விட்டாள்.

அவள் ஆச்சரியத்தை அதிகப்படுத்தும் வண்ணம் தான் தேவேந்திரனும் பேசினான்.

யார் அது? என அவன் கேட்டதும்.

நிர்மலா என்றாள் உற்சாகமாக

ஆனால் தேவேந்திரனிடம் எந்த உற்சாகமோ பரபரப்போ இல்லை. மிகச் சாதாரணமாகவே பேசினான்.



ஓ நிர்மலாவா என்ன விஷயம் என்றான் சுருக்கமாக.

தேவேந்திரன் நீங்கள் ஏன் போக வேண்டும்? உடனே திரும்பி வாருங்கள்.

மறுபுறம் அவன் கடகடச் சிரிப்பு சிரிப்பது கேட்டது.

ஓ நோ. நிர்மலா சூழ்நிலை காரணமாக நான் திரும்பி வரும் நிலையில் இல்லை..ஆனால்.

சொல்லுங்கள்.

வேறு ஒரு விஷயத்திற்கு..அதில் கண்டிப்பாய் கலந்து கொள்வதற்கு நான் வருவேன் அது என்ன தெரியுமா?

என்ன? நீங்களே சொல்லுங்கள்.

அதான் உன் வெட்டிங் மேட்டர் உனக்கும் கிரிதரனுக்கும் நடக்கப் போகும் கல்யாணம்.

தேவேந்திரன் சொல்ல நிர்மலா அதிரத்தான் செய்தாள்.

என்ன சொல்கிறீர்கள்? எனக்கும் கிரிதரனுக்கும் கல்யாணமா?

ஆமாம்

யார் சொன்னார்கள்?

வேறு யார் கிரிதரனே தான் கல்யாண இன்விடேஷன் கூட அடிக்க டிசைன் தயாராக்கி விட்டானாமே?

அப்படியா? எனக்குத் தெரியாது. என்றாள் அவள்.

உனக்குத் தெரியாதா? என்ன உளறுகிறாய்..?

அவன் கோபமாய் கேட்க பதிலுக்கு அவளும் கோபமாகவே பேசினாள். கிரிதரனுடன் தனக்குக் கல்யாணம் என தேவேந்திரன் அவன் வாயாலே அப்படிச் சொல்வது அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது.

உண்மையைத்தான் சொல்கிறேன். கிரிதரனை மணமுடிக்க எனக்குத் துளியும் சம்மதமில்லை..

அப்படியா?

அப்படியேதான்.நீங்கள் கற்பனை செய்கிற மாதிரியெல்லாம் ஒரு போதும் நடக்கப் போவதில்லை..

நிர்மலா

குரலை உயர்த்தினான் கிரிதரன்.

ம்ம் சொல்லுங்கள்..

அவளும் குரல் உயர்த்தினாள்.

ஒருவேளை வேறு வழி இல்லாமல் போய் அப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலை வந்தால் என்ன செய்வாய்?

ஒன்று செய்ய மாட்டேன் செத்து விடுவேன்..

என்றாள் நிர்மலா உறுதியான குரலில்.

நிர்மலா உறுதியாகவா சொல்கிறாய்.

ஆம் உறுதியாக இறுதியாகச் சொல்கிறேன்.அப்படி ஒரு நிலை வந்தால் நான் உயிரை விட்டாலும் விடுவேனே தவிர கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டேன்..

உறுதியாய் தீர்க்கமான குரலில் பேசி விட்டு டக்கென போனைத் துண்டித்தாள் நிர்மலா.

நிர்மலா ஒன்றும் ஓடவில்லை.

நடப்பதெல்லாம் தலைக்கு மேல் வெள்ளம் போன கதைதான்.

இனி அவளால் ஒன்றும் செய்ய முடியாதோ?

பித்துப் பிடித்தவள் போல்தான் இரண்டு மூன்று நாள் அலைந்தாள்.

எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் நெருக்கடி கூடிக் கொண்டே தான் இருந்தது.

கிரிதரனுக்கும் அவளுக்கும் எப்படி எந்த மண்டபத்தில் வைத்த கல்யாணத்தை நடத்துவது யார் யாரை முக்கிய வி.ஐ.பி.க்களாய் அழைப்பது, இன்னிசை கச்சேரி பிரபல ஆர்கெஸ்டரா போன்று எதுவும் ஏற்பாடு செய்ய வேண்டுமா என ஒவ்வொன்றாய் பட்டியலிட்டு பேச ஆரம்பித்து விட்டார்கள்.

எல்லாமே அவள் காது பட பேசினார்கள் தவிர ஒப்புக்காக ஒரு வார்த்தை கூட அவளிடம் சொல்லவும் இல்லை கேட்கவும் இல்லை.

ஆமாம் மாப்பிள்ளையை முடிவு செய்துவிட்டு. அதையே கேட்காதவர்கள் இதையா கேட்கப் போகிறார்கள்?

என்ன செய்வது? என குழப்பித் தவித்தவள் மறுபடியும் தந்தையைத் தான் தேடிப் போனாள்.

திருவாசகத்தை பயபக்தியோடு மனம் உருக படித்துக் கொண்டிருந்தவர் மெல்ல நிமிர்ந்து கனிவுடன் அவளைப் பார்தார்.

குழப்பம் ஒன்றும் கொள்ளாதே கல்யாணம் எல்லாம் நல்லபடியாக நடக்கும்..என்றார் அவள் பேச்சை ஆரம்பிக்கும் முன்பாக.



ஆனால் எல்லாமே நம்மிடம் கேட்காமலே நடக்க ஆரம்பித்து விட்டது போல் தெரிகிறதே என்றாள் புருவம் உயர விழிகளின் படபடப்போடு.

சதாசிவத்திற்கு அவள் சொல்வது எல்லாம் புரியத்தான் செய்தது. அவரது முகமும் தீவிர சிந்தனைக்கு போனது.

எனக்கும் அதுதான் புரியவில்லை அம்மா எல்லோரும் திடீரென இந்தக் கல்யாணப் பேச்சை எடுத்துப் பேசுகிறார்கள். ரொம்பவும் தான் அவசரப்படத்துகிறார்கள். நீதான் பார்த்து முடிவெடுக்க வேண்டும். நீ என்ன முடிவெடுத்தாலும் எனக்கு சம்மதம் தான் அம்மா.

அப்பா இப்படிச் சொன்னதும் விருட்டென திரும்பி விட்டாள் நிர்மலா.

அப்பாவாவது தன் பக்கம் பேசுவார் தனக்காக முடிவெடுப்பார் என்று பார்த்தால் அவரும் நீயே முடிவெடு என்று அந்தப் பழியை நம் பக்கம் திருப்பி விட்டு விட்டாரே என எரிச்சலானாள்.

அன்று முழுதும் அதே யோசனையில் பொழுதை கொதிப்பாய் கழித்தவள் மறுநாள் விடிந்ததும் முதல் வேலையாய் மூவரையும் தேடிப் போனாள்.

அவர்களை முக்கியமான விஷயம் பேச வேண்டும் என அழைத்து வந்தாள். உதயா கௌரி கிரிதரன் அடங்கிய மூவர் கூட்டணி எவ்வித மறுப்பும் சொல்லாமல் அவளைப் பின் தொடர்ந்து வந்தது.

சொல்ல வேண்டியதைச் சொல்..என்றார்க்ள மூவரும்.

நிர்மலா முகம் சிவந்து அனலாய் கொதித்தவள் நெருப்பாகவே சீறினாள்.

நீங்கள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றாள்.

என்ன நிர்மலா சொல்கிறாய்? என்றாள் உதயா

புரியாதது போல் பேசாதீர்க்ள..

முதலில் நீ புரியும்படி பேசு என்றாள் கௌரி முன்னால் வந்து.

யாரைக் கேட்டு இப்படி கல்யாண ஏற்பாடுகளைச் செய்கிறீர்கள்..சொல்லுங்கள்?

யாரைக் கேட்க வேண்டும்? என்றாள் உதயா மறுபடி குரலை உயர்த்தி.

யாரைக் கேட்க வேண்டுமா? என்ன உளறல் இது? நான் தானே மணப்பெண் என்னை கேட்க வேண்டாமா? என் சம்மதம் வேண்டாமா?

அதான் தெரிந்து கொண்டோமே நீ கிரிதரனை விரும்புகிறாய். அவனைக் காதலிக்கிறாய் அதனாலே இந்தக் கல்யாண ஏற்பாடுகள்.

இல்லை இல்லவே இல்லை நான் கிரிதரனை காதலிக்கவில்லை. நான் விரும்புவது தேவேந்திரனைத் தான் அவரைத்தான் காதலிக்கிறேன். அவரையே கட்டிக் கொள்ள விரும்புகிறேன்.

என்ன தேவேந்திரனையா?

ஆமாம் தேவேந்திரனைத்தான் விரும்புகிறேன்..குரல் உயர உச்சஸ்தாயியில் கத்தியே சொன்னாள் நிர்மலா.

மறுகணம் தான் அந்த அதிசயம் நடந்தது.

நிர்மலா கத்தலைக் கேட்ட மூவரும் திடக்கிட்டு ஸ்தம்பிப்பதற்குப் பதில் இறுக்கம் விலகியவர்களாய். மென்மையாய் ஆரம்பித்து கடகடவென சிரிக்க ஆரம்பித்தார்கள்.



## 15

உதயா கௌரி கிரிதரன் எல்லோருமே சிரிக்க ஆரம்பித்தனர். அதுவும் அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரிக்குமளவுக்கு.

நிர்மலா விழிகள் விரிய அதிசயித்து திகைக்கத்தான் செய்தாள்.

நாம் சொன்ன விஷயங்களுக்கு கோபம் வந்து தாம் தீம் என குதிப்பார்கள் என பார்த்தால் எல்லோரும் சிரிக்கிறார்களே.

மூச்சு வாங்க அவள் ஆவேசப்பட்டு பேசியது அவர்களுக்கு கடுகளவேனும் உரைக்கவில்லையே என்னாயிற்று இவர்களுக்கு எருமை மாட்டின் மீது மழை பெய்த கதையாய் திடீரென சொரணை இல்லாமல் போய் விட்டதா?

அவள் திகைக்க அவள் வியப்பை மேலும் அதிக மாக்கியபடி கௌரியும் உதயாவும் பக்கத்தில் வந்து அவளைத் தோளோடு அணைத்துப் பிடித்துக் கொண்டவர்கள் மறுபடியும் அந்த விழுந்து விழுந்து சிரிப்பைத் தொடர்ந்தார்கள்.

சரிதான் நட்டு எதுவும் கழண்டு விட்டதோ ஆனா லும் ஒரே நேரத்தில் மூணு பேருக்குமா கழரப் போகிறது?

அவள் அதிசயமாய் மூவரையும் பார்க்க கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிய உதயாவும் கௌரியும் அட நம் பத்தாம் பசலி நிர்மலா இந்தப் பேச்சு பேசுகிறாளே பேஷ் பேஷ் நிர்மலா மேடம் உங்க பேச்சு கேட்க ரொம்ப நன்னா இருக்குஎன்று சொல்லவும் தான் அவர்கள் புரிந்து எதையோ ரசித்துச் சிரிக்கிறார்கள் என்பது அவளுக்கு உரைத்தது.



அவள் மேலும் புருவம் உயர்த்தி விழிகளை விவரிக்க போலியாய் பதறிய கௌரி போதும் போதும் நிர்மலா மேடம் இதற்கு மேலும் விழிகளை விரிக்காதீர்கள். உங்கள் அழகான கருவிழிக் கண்மணிகள் தெறித்து வெளியே வந்துவிடப் போகிறது என்றாள் சிரிப்பு அடங்காமல்.

"நிர்மலாவுக்க பொறுக்க முடியவில்லை."

இங்கு என்னதான் நடக்கிறது? சொல்லுங்கள் என்றாள்.

ஒரே வரியில் சொல்லட்டுமா? என்றாள் உதயா

"சொல்லு.."

இங்கு இவ்வளவு நாள் நடந்தது எல்லாம் எங்களது கச்சிதமான நடிப்பு.

நடிப்பா?

அதேதான் அந்த நாலு எழுத்து நவன்னா, டியன்னா ப்பன்னா, புவன்ன்னா தான்.

நடிப்பா? எதற்கு.

எல்லாம் உன்னை சோதிக்கத்தான் உன்னுடைய உண்மையான மனதை அறிய நாங்கள் நடத்திய திருவிளையாடல்தான்..

அவர்கள் சொல்லச் சொல்ல புரியாமல் நிர்மலாவுக்க எரிச்சல் தான் வந்தது.

என்ன உளறுகிறீர்கள் என்றாள் கோபமாய்.

கௌரி அவள் முன்னால் வந்து கைகட்டி மூக்கைப் படித்து கிள்ளினாள். கோபமெல்லாம் படக்கூடாது. சாந்தம் சாந்தம் மகாராணி முதலில் உங்கள் ப்ரியமான மணாளனை ராஜகுமாரனை காட்டி விடுகிறேன். செங்கணலாய் கொழுந்து விட்டு எரியும் உங்கள் கோபத்தீயை அவர் இதமாக அணைக்கட்டம்..என்றபடி கௌரி திரம்பி கிரிதரனைப் பார்த்தாள்.

அண்ணா சஸ்பென்ஸ் போதும் நிர்மலா இதற்கு மேல் தாங்க மாட்டாள். ஒளிந்திருக்கும் நம் கதாநாயகரை உடனே வரச் சொல்லுங்கள்.

மணாளன் ராஜகுமாரன் கதாநாயகன் ஒளிந்திருக்கிறானா யார் அது?

நிர்மலா திடுக்கிட்டுப் போய்த்தான் பார்க்க கிரிதரன் சஸ்பென்ஸ் இப்போது உடைகிறது.. என்றபடி கைகளைத் தட்டினான். வாடா என் அருமை ராஜகுமாரா ஒளிந்திருந்தது போதும் நீ போட்டியில் ஜெயித்து விட்டாய். நிர்மலா உன்னைத் தான் காதலிப்பதாய் நிர்மலா வெளிப்படையாகவே சொல்லி விட்டாள். கிரிதரன் சிரித்தபடி கத்தியதும் பின்னால் சுவர் மறைவு ஒன்றில் இருந்து வந்த உருவத்தைப் பார்த்து நிர்மலாவின் மூச்சே ஒரு கணம் நின்று விட்டது.

வெளிவந்தது சாட்சாத்..;அவளது ராஜகுமாரன்தான் தேவேந்திரன்தான்.

ஐயோ தேவேந்திரனா? அவர் எப்படி. இங்கு

நம்ப முடியாத ஆச்சரியத்துடன் . ஷாக்கடித்தது போல் தான் அவனைப் பார்த்தாள் திகைப்பு விலகாமல் பக்கத்தில் ஓடினாள்.

பக்கத்தில் சென்று நம்பாமல் அவனை உற்றுப் பார்த்தாள்.

கிள்ளிப் பார் நான் தேவேந்திரன்தான் என்றான் தேவேந்திரன்.

நீங்கள் இவ்வளவு நேரம் இங்குதான் ஒளிந்து இருந்தீர்களா? இவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். அப்படியானால் ஊரிலிருந்து எப்போது வந்தீர்கள்

தேவேந்திரன் தனது இதழ் விரித்த புன்னகையை பெரிதாக்கினான்.

ஊருக்குச் சென்றால்தானே திரும்பி இங்க வருவதற்கு? நான் எங்கும் செல்லவில்லை. இங்கே இதே வீட்டில் கிரிதரன் ரூமில் ஒளிந்து தான் கிடந்தேன் என்றான் தேவேந்திரன். நீ போன் பேசும் போது கூட செல்போனில் பக்கத்து ரூமில் இருந்துதான் உன்னிடம் பேசினேன் என்றான். மொத்தமுமாய் அவளை அதிர வைத்தவாறு.

என்ன ஊருக்குச் செல்லவில்லையா? கிரிதரன் ரூமில் ஒளிந்து கிடந்தீர்களா?

ஆமாம் கண்மணி எல்லாமே ஓர் நடிப்பு ஆனாலும் உன் கண்ணில் படாமல் இந்தப் பதினைந்து நாட்களை இந்த வீட்டில் ஒளிந்தபடி கடத்துவதற்குள் போதும் போதும் என்றுதான் ஆயிற்று.

ஐயோ ஒன்றுமே புரியவில்லை என்னைக் குழப்பு குழப்பு என்றுதான் குழப்புகிறீர்கள்.தெளிவாக எனக்குப் புரியும்படி சொல்லுங்கள் என்றாள் அவள் அதே தவிப்புடன்.

சொல்கிறோம். அது பெரிய கதை என்றபடி தேவேந்திரன் கிரிதரனைப் பார்த்து கண் சிமிட்டியபடி நீ போட்டு ஆட்டுவித்த டிராமாவை நீயே விளக்கு என்றான்.

ம்ம் சொன்னால் போயிற்று என கிரிதரனும் பதிலுக்கு கண் சிமிட்டியவன் கதை போல் நடந்தவைகளை விவரிக்க ஆரம்பித்தான்.

நிர்மலா கடந்த மூன்று மாதங்களாக உன் கண் முன்னால் நடந்தது டிராமாதான் உதயா கௌரி நான் தேவேந்திரன் எல்லோரும் சேர்ந்து போட்ட நாடகம் தான் அதை விவரமாகச் சொன்னால்தான் உனக்குப் புரியும். முதலில் நானும் தேவேந்திரனும் உன்னை முதன் முதலில் பார்த்த ரயில்வே ஸ்டேஷன் சம்பவத்தில் இருந்தே ஆரம்பிக்கிறேன். அன்றுநீ தேவேந்திரன் நான்தான்



என நினைத்துக் கொண்டு பேசினாய். அவன்தான் கிரிதரன் எனவும் அப்போதே நம்பிவிட்டாய்.

வீட்டில் உள்ள அனைவரும் எனக்குத் தெரிந்து நீ எனது சொந்த அத்தை பெண். உன்னைத்தான் நான் கட்டிக்கொள்ள வேண்டும் என்பது போல் ஒரு மாயையே ஏற்படுத்தி இருந்தார்கள்.

அந்தச் சூழ்நிலையில்தான் நி கிரிதரன் என தேவேந்திரனை நினைத்துக் கொண்டு அவனிடம் அதீத ஈடுபாடு காட்டிப் பேசினாய் பழகினாய்.

பின் அவன் கிரிதரன் இல்லை அவன் தேவேந்திரன் என்று தெரிந்த போதும் நீ அவன் மீது ஈடுபாடு காட்டினாய். அவனை வெகுவாய் ரசித்தாய்.

இதைக் கவனித்த உயிருக்குயிரான நண்பர்களான நானும் தேவேந்திரனும் ஒரு போட்டி. வைத்தோம் அதுவும் என்ன போட்டி தெரியுமா? காதல் போட்டி

"என்ன காதல் போட்டியா?"

என்றபடி. நிர்மலா அதிர அவசரப்படாதே முழுவதையும் கேள். என்றபடி கிரிதரன் தொடர்ந்தான்.

காதல் போட்டிதான் அதுவும் எப்படி. எங்கள் இருவரில் யாரை நீ விரும்புவாய் என்கிற ஒரு விளையாட்டுத் தனமாய் போட்டி அதாவது நானும் தேவேந்திரனும் உனக்கு காதல் வலை விசுவோம் நீ யார் பக்கம் விழுகிறாய் என்பது எங்களுக்குள் நாங்கள் வைத்த போட்டி இன்னும் விளக்கமாகச் சொன்னால் நீ சூழ்நிலைக்காக சொந்தங்கள் நிர்ப்பந்தப் படுத்தும் என்னைக் காதலிக்கப் போகிறாயா? அல்லது இயற்கையாக உன் மனதை தட்டி எழுப்பிய நிர்பந்தம் படுத்தும் என்னைக் காதலிக்கப்போகிறாயா? என்பதுதான் இதற்காக நாங்கள் பெட் கட்டாத குறையாய் ஒரு போட்டியைத் தொடங்கினோம். எனக்கு ஆதரவு திரட்டுவது போல் உதயாவும் கௌரியும் களத்தில் இறங்கி என் மேல் காதல் வரும்படி வேண்டுமென்றே சில சூழ்நிலைகளை ஜோடித்துப் பார்த்தார்கள். அனால் இன்றுதான் நீதேவேந்திரனை காதலிப்பதை ஒத்துக் கொணடாய்.

அதே நேரம் தேவேந்திரன் மேல் நீ கொண்டிருந்த காதலை உறுதிப் படுத்த கிசுகிசுப்பு பாணியில் பேசி உனது உண்மையான மனநிலையை சீண்டினர். அப்படிசீண்டிய போதுதான் தேவேந்திரன் மீது நீ வைத்திருந்த காதல் எத்தகையது என்பதை நீ கூட உணர்ந்திருப்பாய் என நினைக்கிறேன்.

மேலம் நீ நினைப்பது போல் தான் உதயா கௌரி மூவரும் தேவந்திரன் மேல் காதல் வைத்திருப்பதை ஆரம்பத்திலேயே உணர்ந்து

விட்டோம். நாங்கள் அதற்கு எதிரியும் அல்ல. தேவேந்திரன் என் உயிர் நண்பன் மட்டும் அல்ல. எங்கள் குடும்பத்து உறுப்பினர் மாதிரித் தான் அவனும் அதே போல் உதயா கௌரிக்கும் அவன் தேவேந்திரனும் உடன் பிறவா அண்ணன் தான்.

"நாங்கள் மூவரும் விளையாட்டுத்தனமாய் சீண்டி உன் காதலை ரசித்தோம்."

குடும்பச் சூழ்நிலைக்காக காதலைச் சொல்லாமல் எவ்வளவு காலம் உன்னால் தாக்குப் பிடிக்க முடியும் எனவும் நினைத்தோம். ஆனால் இன்றுதான் நீ வெளிவந்தாய் தேவேந்திரனைக் காதலிப்பதை வெளிப்படையாய் சொல்லி இருக்கிறாய்.

ஆனால் நீ சரியான கல்லுளி மங்கினி என்றுதான் சொல்லவேண்டும். ஒரு பக்கம் தேவேந்திரன் மேல் உள்ள காதலை விடாமல் மறுபக்கம் குடும்பச் சூழ்நிலையை புரிந்து கொண்டு யார் மனதையும் புண் படுத்தாமல் அதற்கேற்றாற்போல் நடந்து கொண்டு மிக நன்றாக பாலன்ஸ் செய்தாய். கடைசி வரை சுயநலம் கொள்ளாமல் அதே நேரத்தில் உன் காதலையும் விட்டு விடாமல் நடந்து ஜெயித்தும் காட்டி விட்டாய். உனக்கு மட்டுமல்ல... தேவேந்திரனோடு இணையப் போகும் உங்களது காதலுக்கும் எனது இல்லை இல்லை எங்களது இனிய நல் வாழ்த்துக்கள்.

கிரிதரன் சொல்லியபடி தனது உரையை முடிக்க உதயாவும் கௌரியும் பக்கம் வந்து அவள் கைகளைப் பிடித்தனர். எங்களை மன்னித்துவிடு நிர்மலா சும்மாவாக ஒரு விளையாட்டுத்தனமாய்த்தான் உன்னைச் சீண்டி அப்படியெல்லாம் நடந்து கொண்டோம். எங்கள் மீது கோபமில்லையே? என்றபோது நிர்மலா தன்கோபம் எல்லாம் நீங்கியவளாய் அழகுப் புன்னகையை பெரிதாக்கினாள்.

அன்பொழுக அவர்கள் இருவரையும் கட்டிக் கொண்டாள்.

"கட்டிப் பிடித்த அவளைவிடுவித்த அவர்கள் இருவரையும் கட்டிக் கொண்டாள்."

கட்டிப் பிடித்த அவளை விடுவித்த அவர்கள் இருவரும் என்ன கூத்து இது? இனி நீ கட்டிப் பிடிக்க வேண்டியது என்னை அல்ல மிஸ்டர் தேவேந்திரன் ஹி இஸ் வெயிட்டிங் என்றபடி அவளை தேவேந்திரனை நோக்கி

ஏறக்குறைய தள்ளியே விட்டனர்.

தடுமாறி சிரிப்புடன் தன் பக்கம் வந்த நிர்மலாவை அதற்காக காத்திருந்தவன் போல் தாவி அணைத்துக் கொண்டான் தேவேந்திரன்.



அவன் அப்படி அணைத்ததும் கிரிதரன் திரும்பி உதயாவையும் கௌரியையும் பார்த்தவாறு ரெடிஜீட் இனி நமக்கு இங்கு வேலை இல்லை கிளம்புவோம் என சைகை செய்ய வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஓசையில்லாமல் மூவரும் இடத்தை காலி செய்தனர்.

தேவேந்தின் அவர்கள் சென்றதை உறுதிப்படுத்தி விட்டு நிர்மலாவை பிடித்திருந்த தனது அணைப்பை இறுக்கியவன் காதல் பார்வையை அவள் மீது பதிக்க சினமாய் தான் அவனை ஏறிட்டாள் நிர்மலா.

முதலில் இந்த அணைப்பை விடுங்கள் பெரிதாய் அணைக்க வந்து விட்டாராக்கும்.. என்றாள் சீறலாய்.

தேவேந்திரனோ அந்த சீறலுக்கு கொஞ்சமும்அசராமல் அவளை மேலும் இறுகப் பிடித்து அவளது பட்டான கன்னத்தில் மெல்ல தன் இதழ்களை ஒற்றியெடுத்தான்.

இவ்வளவு நடந்திருக்கிறது. அனல் பறக்கும் கோபம் இல்லாமலா இருக்கும் அதை கொஞ்சம் தணிக்கிறேன். என்றபடி மீண்டும் அவளை நோக்கி குனிய அவனை தடுத்தவள் முதலில் எனது கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள் என்றாள்.

ம்ம் கேளுங்கள் மேடம் என்றான் அவன் பவ்யமாய்.

அவர்கள்தான் ஜாலியாக விளையாட்டுப் போல் ஒரு நாடகம் போட்டால் நீங்கள் எப்படி. அதற்கு ஒப்புக் கொண்டீர்கள் அதைச் சொல்லுங்கள் என்றாள் சீறல் குறையாமல்.

ஓ நீ அதைச் சொல்கிறாயா? என்றபடி தேவேந்திரன் இதழ்களை விரித்து தனது வசீகரப் புன்னகையை மீண்டுமொருமுறை காட்டியவன் நடந்த நாடகம் முழுவதும் எதற்கு தெரியுமா? என்றான்.

எதற்கு?

"நீ யாரை காதலிக்கிறாய் என்பதைக் கண்டு பிடிக்கத்தான்."

சிரிப்பு பொங்க அவன் சொன்னாலும் அடங்காதவளாய் அழகான தலையைச் சாய்த்தவள் அவனை முறைக்கத்தான் செய்தாள்.

சல்ல ஆராய்ச்சி ஏன் உங்களுக்குத் தெரியாதா? வாய்விட்டு சொன்னால்தான் புரியுமா?

"குரல் உயர நிர்மலா தலையசைத்தான் தேவேந்திரன்."

ஐயோ முதலில் இந்த கோபத்தைக் குறை நிம்மிக்கண்ணு என்னதான் கோபத்தில் உன் அழகு ஜொலித்தாலும் இந்தக் கனல் பறக்கும் அழகை நான் அப்படியே ரசித்துப் பார்க்க கொஞ்சம் பயமாய்த்தான் இருக்கிறது.

அவன் சிணுங்கலாய்ச் சொல்ல செல்லமாய் கையை ஓங்கி அதட்டினான் அவள் இந்த ஐஸ் வைக்கிற வேலை யெல்லாம் என்னிடம் வேண்டாம். என் கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கள் என்றாள் கறாறாய்.

"கேளுங்கள் மேடம்"

நான் யாரைக் காதலிக்கிறேன் என்று தெரியாததாலா இந்தப் போட்டி?

நிச்சயமாக அப்படித்தான். நீ யாரைக் காதலிக்கிறாய் என்று உறுதியாய்த் தெரியாதது ஒரு பக்கம் சூழ்நிலைக்காக உன் நிலையை மாற்றி கொள்வாயாஎன்பது ஒரு பக்கம் என எல்லாவிதத்திலும் ஒரு சந்தேகம் ஓர கேள்வி அந்தக் கேள்விக்கு விடை காணத்தான் இந்தப் போட்டி.

சரி.. இதற்கு அவர்கள்தான் ஏற்பாடு செய்தார்கள் என்றாலும் என்னுடைய உணர்வுகளில் விளையாட நீங்களும் எப்படி ஒத்துக் கொண்டீர்கள்? எப்படி சம்மதித்தீர்கள்?

நிர்மலாவின் கேள்விக்கு தேவேந்திரன் ஓர கணம் தெளியத்தான் செய்தான். தவறுதான் கண்மணி. ஆனால் இந்த ஊடலில் ஒரு சுவராஸ்யம் கிடைக்கும் என்பதால்ஒத்துக் கொண்டேன். ஒரு புறம் நமக்கு தவிப்பாக இருந்தாலும் அதிலும் ஓர இனிமை தென்பட்டது தானே?

இனிமையா? அப்படித் தவித்தது இனிமையாகவா உங்களுக்குத் தெரிகிறது? என கண்கள் விரிய சினமானவள் என்னுடைய தவிப்பு நான் பட்ட வேதனை எனக்குத்தான் தெரியும் என்றபடி குரல் கம்ம அவனை ஒருமுறை நெஞ்சார அணைப்பு செய்து விடுவித்தான் அவன்.

அவள் புரியாமல் மேலும் விழிகளை மலர்த்த என்ன அப்படிப் பார்க்கிறாய்? இது போன்ற நெஞ்சார அணைப்பு ஒன்று செய்துதானே என் காதலை உனக்குத் தெரிவித்தேன். உன் காதலையும் நான் அறிந்தேன். என்றான் பீடிகையாய்.

அவள் நிர்மலா புருவம் உயர்த்தினாள்.

உங்கள் காதலை தெரிவித்தது சரி. அது என்ன என் காதலை நீங்கள் உணர்ந்தது?

"அவன் இழுக்க் சிரித்தான் தேவேந்திரன்."

புரியவில்லையா? உன்னை திடுதிப்பென இழுத்து அப்படி நெஞ்சார அணைப்பு செய்தபோது நீ அதை எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் அனுமதித்தாயே அந்தக் கணத்தில் அப்போதே புரிந்து கொண்டேன் நீயும் என் மீது உன்னுக்குள் தீவிரமான காதலை கொண்டிருக்கிறாய் என என்றவன் என்ன நான் சொல்வது சரி தானே என அவள் முகம் நிமிர்த்த குங்குமமாய் சிவந்தபடி குனியப் போனாள் அவள்.



# சினிமா துளிகள்

- மணிரத்னம் தன்னுடைய ராவணன் படத்தை தெலுங்கில் வில்லன் என்ற பெயரில் ரிலீஸ் பண்ணவிருக்கிறார்.
- பிரகாஷ்ராஜ் நடித்துள்ள நானு நன்ன கனசு இம்மாதமே ஷூட்டிங் முடிந்து ரிலீஸாகவிருக்கிறது.
- சிரஞ்சீவியின் வாரிசு ராம்சரணை தமிழ் இயக்குநர் தரணி இயக்குவது நாயகனுக்கு நாலாவது படம்.
- ஜீமண்டி நாதம் என்ற படத்தில் மனோஜை இயக்குகிறார் மூத்த இயக்குநர் ராகவேந்திரராவ்.
- பாலு மகேந்திராவின் சிஷ்யர் எல்.சுரேஷ் இயக்கிய கலவர் கிங் நல்ல வரவேற்பை பெற்றதால் அடுத்த அழைப்பு வந்தாலும் தமிழில் மும்முரமாயிருக்கிறார்.
- தயாரிப்பாளர் ஆதித்யா பாபு மலையாளக் கதையொன்றில் கன்னட இயக்குநர் மாதேஷின் தெலுங்கு படத்தில் நடித்து வருகிறார்.
- தலைப்பு கிளாமர் என இருந்தாலும் தயு சர்டிபிகேட் வாங்கியுள்ள புதுமுகங்களின் படத்தை பி.சத்யா தயாரித்து இயக்கியுள்ளார்.
- ஹரிஹரனும் கவுசல்யாவும் பாடியுள்ள பங்காரு கொண்டா எனும் சிம்மா படப்பாடல் பெரிய ஹிட்டாகியுள்ளது.
- முழு ஷூட்டிங் முடிந்துவிட்ட அனுஷ்காவின் பஞ்சாக்ஷரி படத்துக்கு மே மாதம் மியஷளிக் ரிலீஸ் என அறிவித்துள்ளனர்.
- ஜூனியர் என்.டி.ஆரின் தகிட தகிட ரொம்ப நாள் இழுத்துக்கொண்டு இருந்தாலும் இறுதிக்கட்ட ஷூட்டிங் நடந்து வருகிறது.
- கிருஷ்ணடுவின் கோத்தி மஷிக்கா குறைந்த காலத்தில் குறைந்த செலவில் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது.
- ராம் சரணின் உறவினரான அல்லு அர்ஜூனுக்கு பல படங்கள் இசையமைத்த தேவிஸ்ரீ பிரசாத் இப்போது ராம் சரணின் படத்துகக்கும் இசையமைக்கிறார்.
- பிரபாஸின் டார்லிங் படத்துக்கு ரசிகர்களின் வரவேற்பு பலமாக இருப்பதால் காட்சிகளை கூடுதலாக்கியுள்ளார்கள் அமெரிக்காவில்.
- பவன் கல்யாண் நடிக்கும் ஹிந்திப் படிப்பான லவ் ஆஜ்கலுக்கு ஜூன் மாதம் ஷூட்டிங் என உறுதி செய்யப்பட்டுள்ளது.
- தேச முத்ரு படத்தை முடித்துக் கொண்டு பத்ரிநாத்தில் நடித்து வரும் அல்லது அர்ஜுன் குறுமணாலியில் பாடல் காட்சியில் நடித்து வருகிறார்.

- சிரஞ்சீவியின் தம்பி பவன் கொமரம் புலியை விடவும் ஹிந்திக் கதையான லவ் ஆஜ்கல் மே பெருத்த நம்பிக்கையா இருக்காராம்.
- அடிச்சு புடிச்சு தெலுங்கு படத்தை ரிலீஸ் பண்ணிட்டு திரும்பவும் இங்கே வந்து ஹீரோவா ஆக்ட் குடுக்கப் போறாராம் எஸ்.ஜே.சூர்யா.
- இயேசு பிரானைப் பற்றி உருவாகி வரும் படத்துக்கு ஆராதனா என தலைப்பிடப்பட்டுள்ளது.
- பரம் வீர சக்ரா படத்திற்கு நாயகனாகியிருக்கிறார் பாலகிருஷ்ணா.
- அதிக நாள் தயாரிப்பில் இருந்த கோலிமார் இம்மாத இறுதியில் தியேட்டர் களுக்கு வருகிறது.
- முன்னனித் தயாரிப்பாளரான ஆதித்யா பாபு ஹீரோவாகியுள்ள படத்துக்கு சாலகி எனப் பெயரிடப்பட்டுள்ளது.







இந்த வெட்கமெல்லாம் என்னிடம் ஆகாது என்றபடி தனது இதழ்களை வேகமாய் அவள் கன்னங்களுக்கு அவன் கொண்டு செல்ல முயல அவசரமாய்த் தடுத்தவள் இன்னுமொரு கேள்வி என்றாள்.

"அட கேள்விகள் முடியவில்லையா? எதுவானாலும் கேள்". கண்மணி என்றான் சன்னமாய்.

"இந்த நாடகக் கூத்து, நீங்கள் நடத்திய காதல் போட்டி பெரியவர்களுக்குத் தெரியுமா? அவர்கள் அறியத்தான் நடந்ததோ?"

"ஐயையோ என தேவேந்திரன் பதறியவன் இந்த விளையாட்டு பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்களுக்கு தெரிந்த விஷயம் ஒன்றே ஒன்றுதான்."

"அப்படியா? அது என்ன?"

நீ என்னை காதலிப்பது நான் உன்னை விரும்புவது எல்லாம் அவர்களுக்கும் தெரியும்.

"தெரியுமா! எப்படி?"

எல்லாவற்றையும் கிரிதரன் விரிவாய் விளக்கமாய் சொல்லி விட்டான் அவர்களுக்கு புரியவும் வைத்து விட்டான் அவர்களும் சம்மதித்து விட்டார்கள்.

"நிஜமாகவா? அவர்களுக்கு ஒன்றும் வருத்தம் இல்லையே?"

நிச்சயமாக இல்லை கண்மணி அவர்களுக்கு மட்டுமல்ல உதயா சௌரி கிரிதரன் மூவருக்குமே உன் முடிவில் எவ்வித வருத்தமும் கிடையாது.

அடுத்த **அக்ஷயா** குடும்ப நாவலில்

**அகிலாகோவிந்த்** எழுதும்

# "காதல் ராஜகுமாரி..!"

**சுவையான நாவல்..!**

**படிக்க தவறாதீர்கள்..!**

ஏனென்றால் அவர்கள் எப்போதும் என்னை வேறு நபராய் நினைத்ததில்லை பிரித்துப் பார்த்ததில்லை குடும்பத்து உறுப்பினராகவே என்னை கருதி வந்தார்கள் அதனாலே நம் முடிவை மகிழ்ச்சியோட ஏற்றுக் கொண்டார்கள் கல்யாண மண்டபம்முகூர்த்த நாள் அழைப்பிதழ் டிசைன் என அவர்கள் பார்க்க ஆரம்பித்ததும் நம் இருவரின் திருமணத்தை நடத்தத்தான்.

தேவேந்திரன் சொல்லச்சொல்ல அவளுக்கு எல்லாம் புரிந்தது தன் தலையை செல்லமாய் தானே ஒரு குட்டு குட்டியவள் அட அசடு போல ஒன்றையும் புரிந்து கொள்ளாமல் நான்தான் இருந்திருக்கிறேன் என நாணி உதடு கடித்து குனிந்தாள் அவள்.

அவள் வெட்கப்படும் அழகை வியந்து ரசித்தவன் அவள் முகம் நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டு மேலும் சிவக்க வைத்தான்.

அப்படியே அவனது பரந்த நெஞ்சில் முகம் பதிய ஒட்டிக் கொண்டவள் மை விழிக் கண்களை மெல்ல மூடினாள். தேவேந்திரன் தன் பிடியை மேலும் இறுக்கினான். இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தனர் இருவரும்.

(முற்றும்)


**அக்ஷயா குடும்ப நாவல்**

மலர் : 1 இதழ் : 2

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan**,

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035. Phone : 98405 14529





# பரபரப்பான விற்பனையில்




# படிக்கத் தவறாதீர்கள்